
இதழ்-32
01.09.2021
தூமி
பல்சுவை மின்னிதழ்
பெருவெள்ளத்திற்கான பயணம்

# வேப்பம் பூவிலும் சிறு தேன் துளி உண்டு!




இலங்கையில் கொரோனா பேரிடர் மக்களை அச்சத்தில் உறைய வைக்கிறது. உலகளவில் கொரோனாவால் பெரும் ஆபத்தான நாடுகளாக அடையாளப்பட்டுள்ள ஆறு நாடுகளில் இலங்கையும் ஒன்று என்பது மக்களுக்கு மரண பீதியை அதிகரித்துள்ளது. கொரோனா ஏற்படுத்தியுள்ள மரண அச்சத்தையும் தாண்டி விலைவாசி உயர்வு என்பது உயிர் வாழ்வதற்கான நெருக்கடியை இலங்கை மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

கொரோனா வைரஸ் பரவுகை அது சார்ந்த முடக்கங்களால் மக்கள் வருமானம் குறைவு, வருமான இழப்பு என்று அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில், விலைவாசி உயர்வும் இப்படி தாங்க முடியாத அளவில் சென்று கொண்டிருந்தால், எப்படி வீட்டு செலவை சமாளிப்பது?, இதில் எதை குறைப்பது? என்று தெரியாமல், ஏழை - எளிய, நடுத்தர குடும்பங்கள் தவித்துக் கொண்டிருக்கின்றன. தடுமாறிக் கொண்டிருக்கின்றன.

எனவே, அரசாங்கம் உடனடியாக விலைவாசியை மக்கள் தாங்கக் கூடிய அளவில் குறைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்ற கருத்து பல தரப்பினராலும் முன்வைக்கப்படுகிறது.

கோரிக்கைகள் நியாயமானவை யாகும். எனினும் நெருக்கடிகள் இலங்கை அரசாங்கத்தின் கைகளை மீறிச்சென்று விட்டது என்பதும் நிதர்சனமானதே ஆகும். எனவே அரசாங்கத்தை விமர்சிப்பதால் மக்களின் நெருக்கடிகளுக்கு தீர்வு கிடைக்கப் பெற போவதில்லை. மக்கள் தீர்வுகளை நோக்கி நகர வேண்டும்.

நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள விலைவாசி உயர்வில் இலங்கை அதிகம் இறக்குமதிகளில் தங்கியிருக் கின்றமையும் பாரிய தாக்கத்தை செலுத்துகிறது. இவ்விலைவாசி உயர்வு நெருக்கடியின் பாதிப்புக்களை கடக்க சில தியாகங்களுடன் உள்ளூர் உற்பத்திகளையும் அதன் பயன்பாடுகளையும் இலங்கை மக்கள் அதிகரிப்பார்களாயின், இது எதிர்காலத்திலும் இலங்கையை தன்னிறைவு பொருளாதார வலிமையுடைய தேசமாக மிளிர வழி ஏற்படுத்தும்.

எவ்அபத்தத்திலும் ஏதொவொரு சிறு நன்மையும் புதைந்தே காணப்படும். இதுவே உலக சமநிலைக்கும் இதுவரையான உலக இருப்புக்கும் காரணமாயுள்ளது. குறைகளை கடந்து சில தியாகங்களுடன் பெரும் நன்மையை நோக்கி பயணிக்கக தடங்களை தேடுவோம்.

இணை ஆசிரியர்கள்
ஜ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்
த. அபிவிர்ணா

துமி பல்சுவை மின்னிதழ்

ஆசிரியர்
ச. சந்தோஷன்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

வடிவமைப்பாளர்
வ. குணநிதன்

# இவ்விதழில் துமித்தவை...

04 நத்தை மனிதர்கள் எச்சரிக்கை!
06 சித்திராங்கதா
10 கொரோனா நோயினால் வாயில் ஏற்படும் அறிகுறிகள்
13 தாயுமானவரின் சமய சமரசம்
16 சாபமா என் சபதம்?
18 கமலாம்பாள் சரித்திரத்தின் முக்கியத்துவம்
21 தாய்ப்பால் - ஒரு அறிமுகம்
23 அழகான ராட்சசியே!
29 முதலாளித்துவம்
31 கட்டங்களைத் தீர்ப்பவனுக்கே கல்யாணம்
33 சூழல் தரமிழத்தல்
35 சிங்ககிரித்தலைவன்
38 ஈழச்சூழலியல்
40 குறுக்கெழுத்துப்போட்டி
41 T20உலகக்கோப்பை 2021 அணிகளின் அலசல்

# நத்தை மனிதர்கள் எச்சரிக்கை!

வேகம் என்பது நேரத்தோடு சம்பந்தப்பட்டது என்கிறது விஞ்ஞானம். ஆனால் அது உண்மையில் பார்வையோடு சம்பந்தப்பட்டது. இந்த நாள் இவ்வளவு சீக்கிரம் முடித்துவிட்டதே என்று ஏங்குபவர்கள் வாழும் அதே பூமியில்த்தான் அதே நாள் ஏன் இன்னும் முடியவில்லை என்று வருந்துபவர்களும் வாழ்கிறார்கள். நாள் நகரும் வேகம் ஒன்றுதான் என்றாலும் அந்த நாளை அனுபவிப்பவர்களின் பார்வை அந்த நாளின் வேகத்தை தீர்மானிக்கிறது.

வேகமாக நடக்கும் சம்பவங்கள் மீதும் வேகமாக வளர்ச்சியடையும் மனிதர்கள் மீதும் தான் எமது கவனம் எப்போதும் இருக்கும். சில மனிதர்கள் மிக மெதுவாகவே சாதிப்பார்கள். அவர்களின் வளர்ச்சி அவர்களோடு இருப்பவர்களுக்கு தெரியாது. எப்படியென்று கேட்கிறீர்களா? இந்த நத்தை போல. இங்கே அட்டையை அலங்கரித்த அந்த நத்தை காலையில்த்தான் அந்த மரத்தில் ஏறத் தொடங்கியது. இதர பல உயிரினங்கள் பல முறை அந்த மரத்தில் ஏறி இறங்கி இருக்கும். நீங்கள் பார்க்கும் போதெல்லாம் அந்த நத்தை அந்த மரத்தில் எதோ ஒரு பகுதியில் அசையாமல் இருப்பதாகத்தான் தெரியும். ஆனால் மாலையில் அது மரத்தின் உச்சியை அடைந்திருக்கும். உற்றுப் பார்ப்பவர்களுக்கே அந்த உண்மை விளங்கும்.

அவதானத்தை பெறாமல் சாதிக்க நினைப்பவர்களுக்கு நத்தை நல்ல உதாரணம். அப்படியென்றால் அமைதியும் பொறுமையும் நல்லதா? அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாமே! ஆம் அமைதியும் நஞ்சுதான்! சாதிக்க பாடம் சொன்ன நத்தையிடம் அந்தப்பாடத்தையும் கற்கலாம். எப்படி?

நத்தை பலருக்கு உணவாவதால் நத்தை வளர்ப்பும் ஒரு வியாபாரம். ஆனால் பலரின் உணவான நெல் தான் நத்தைகளுக்கும் உணவு. வாயும் வயிறும் கால்களும் அடிப்பாகத்தில் கொண்ட அந்த சின்ன உயிரினம் ஊர்ந்து செல்லும் பரப்பையே உணவாக்கிக் கொள்கிறது. நெல் வயல்களில் கூட்டம் கூட்டமாக காணப்படும் இந்த நத்தைகள் பயிர்



பலன் தருவதை பலவாறு தடுக்கிறது. தண்டுகள், இலைகள், கதிர்கள் என அனைத்தையும் தின்றுவிடுகின்றன. இந்த செயற்படும் அமைதியாகக் தான் நடக்கிறது. ஆனால் ஒரு பெரிய வயற்பரப்பே இந்த செயற்பாடு சர்வ நாசமாக்கி விடுகிறது.

200 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிற்குள் ஆய்விற்காக கொண்டுவரப்பட்ட ஓர் உயிரினமான கிழக்கு ஆப்பிரிக்க நத்தை இந்தியாவின் கொடிய ஆக்கிரமிப்பு உயிரினமாக மாறிய கதை தெரியுமா?

அதற்கு முதலில் ஆக்கிரமிப்பு உயிரினம் என்றால் என்னவென்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட நிலத்தைச் சேராத உயிரினம், வேறு நிலப்பகுதியிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டிருந்து, இந்த நிலத்திலிருக்கும் மற்ற உயிரினங்களின் வாழ்வையே கேள்விக்குறியாக்கும் வகையில் அதன் இனப்பெருக்க விகிதமும் உணவுமுறையும் இருந்தால், அதன் காரணமாக, அது பரவியுள்ள நிலத்தில் வாழும் மற்ற உயிரினங்களை ஆபத்துக்குள் தள்ளினால், அதுவே ஆக்கிரமிப்பு உயிரினம் எனப்படுகிறது.

19-ம் நூற்றாண்டில், வில்லியம் ஹென்றி பென்சன் (William Henry Benson) என்ற ஆங்கிலேயே நத்தையினவியல் ஆய்வாளர் (British malacologist), இந்தியாவிற்கு கிழக்கு ஆப்பிரிக்க நத்தையின் ஒரு ஜோடியை மொரீயஸிலிருந்து கொண்டு வந்தார். இந்தியாவிலிருந்து அவர் திரும்பிச் செல்லும்போது அவற்றை இந்திய நண்பர் ஒருவரிடம் கொடுத்து விடவே, அவரும் கொல்கத்தாவிலிருந்த தன்னுடைய தோட்டத்தில் அவற்றைத் திறந்து விட்டுள்ளார். அதற்குப் பிறகு, 1858-ம் ஆண்டு மீண்டும் இந்தியா வந்த பென்சன், கொல்கத்தாவில் அவை நன்கு பெருகி பரவியிருந்ததாகப் பதிவு செய்துள்ளார். 20-ம் நூற்றாண்டின் இறுதியில், இந்தியா முழுக்க பெருகின. பழத்தோட்டங்கள், விவசாயப் பயிர்கள் அனைத்திலும் இவை பல பொருளாதார இழப்புகளை ஏற்படுத்தியுள்ளன.

இந்த வகையைச் சேர்ந்த நத்தைகள் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இனப்பெருக்கம் செய்கின்றன. குறைந்தபட்சமாகப் பார்த்தாலும், ஒரு நத்தை ஓராண்டில் சுமார் 1,000 நத்தைகள் பிறக்கக் காரணமாக இருக்கிறது. நத்தை தானே என எவரும் பொருட்படுத்தாமல் விட்டதால் அது உலக அளவில் மிகவும் ஆபத்தான, மோசமான ஆக்கிரமிப்பு உயிரினங்களின் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

**எனவே, வீட்டோடும் விடாமுயற்சியோடும் ஊர்ந்து திரியும் நத்தைகளை அவதானத்தோடு கையாளுங்கள். நத்தைகளிடம் மட்டுமல்ல, நத்தை போன்ற மனிதர்களிடமும் எச்சரிக்கையாக இருங்கள்!**

32

காவ்யமோகன்



# சித்திராங்கதா

**இறந்தகாலம் சரி! எதிர்காலம்?**

சந்திர சேகர மாப்பாணரின் பாணன் விளக்கத்திற்கு மாற்று விளக்கத்தோடு எழுந்து நின்ற புலவர் கனகராயரால் சபை ஆச்சரியமயமானது.

“முதலில் விளக்கத்தைக் கூறுங்கள் புலவரே” என்றான் சங்கிலியன்.

“வேந்தே, சிங்கள தேசத்தினர் நல்லூரிற்கு வைத்த நாமங்களே “யாப்பநே”, “யாப்பா பட்டுநே” என்பனவாகும். நல்ல ஊர் என்பதே இவற்றின் பொருளாகும். இவையே நம்முன்னர் வழக்கத்தில் இணைந்து இன்று நம் யாழ்ப்பாணமானது. அதை விடுத்து இப்பாணன் கதையெல்லாம் பின்னாளில் புலவர்கள் உருவகித்ததே அன்றி உண்மையாகாது அரசே” என்று பகிரங்கமாய் கூறி அமர்ந்தார் புலவர் கனகராயர்.

கோபத்தோடு எழுந்த புலவர் சந்திர சேகர மாப்பாணர்
“புலவரே, என்ன அபத்தம் உரைக்கிறீர் என்று அறிவீர்களா? செந்தமிழ் நாட்டின் திருநாமம் ஓர் அந்நிய மொழிச்சொல் என்று இப்பெருஞ் சபையில் உரைப்பதற்கு தைரியம் எங்ஙனம் பெற்றீர் புலவரே? என்ன ஆதாரம் கொண்டு இவ் அபத்தம் உரைத்தீர்? முடிந்தால் அதைக்கூறும் முதலில்!!!”
என்றார்.

”கூறுகிறேன் புலவரே, இந்தத் திருநாமமானது நம் இலக்கியங்களைக் காட்டிலும், சிங்கள இலக்கியங்களிலே முதன்முதலில் கையாளப்பட்டிருக்கிறது. இன்று நம் எல்லோராலும் இத்திருநாமமே கையாளப்படுகிறது. நாமம் முதன்முதலில் உருவான இடமன்றோ அதன் பிறப்புக் காரணம் என்ற உண்மையினை ஆதாரமாக்கியே கூறினேன். இதை ஏற்பதே நிதர்சனமாகும் புலவரே!”

புலவர் கனகராயர் கூறியவை அவையோர்க்கு சங்கடத்தை ஏற்படுத்தியது என்பது எல்லோர் முகங்களிலும் தெளிவாக தெரிந்தது. ஆனால் யாரும் எதிர்த்து பேச முடியாதவர்களாக அமர்ந்திருந்தனர். அந்த சமயத்தில் புலவர் தேவராசேந்திரக் கவிராயர் எழுந்தார்.

“வேந்தே, விடைக்கொடி விண்ணைமுட்ட தமிழர் தாம் தலைநிமிர்ந்து ஆண்ட நம் யாழ்ப்பாண தேசநாமம் சிங்கள மொழித்திரிபு என்கிற புலவர் கனகராயரின் கருத்தை நான் வலுவாக எதிர்க்கிறேன். “யாழ்ப்பாணப் பட்டணம்” என்கிற திருநாமத்தின் மாற்று மொழித் திரிபே அவர்கள் இயம்பும் “யாப்பட்டுநே” ஆகுமேயன்றி அதன் திரிபு எம் இனிய யாழ்ப்பாணம் என்கிற நாமம் என்று கூறுவது அர்த்தமற்றதேயாகும். வெறும் சிங்கள இலக்கிய ஆதாரத்தைக் கொண்டு சபையில் இங்ஙனம் கூறுவது பொருத்தமற்றதாகும் வேந்தே. மேலும் நல்லூர் எனும் நகர் நாமத்தை மொழிமாற்றி பிறமொழியினர் கையாண்டனர் எனக்கூறுவதும் விந்தையாக இருக்கிறது. “பட்டினம்” என்பது எம் பழங்கால நற்றமிழ். “பட்டுநே” மருவி பட்டினம் ஆனதாய்க் கூறுவதும் இன்னும் வேடிக்கை அரசே!” என்றார் புலவர் தேவராசேந்திரக் கவிராயர்.

“அப்படியாயின், புலவர் சந்திர சேகர மாப்பாணர் கருத்தே உண்மையாகும் என்கிறீர்களா தேவராசேந்திரக் கவிராயரே?”

“அது பற்றி நான் அறியேன் அரசே, தகுந்த ஆதாரத்தை அக்கருத்தும் கொண்டிருக்கவில்லை என்றே கருதுகிறேன். என் வேறான கருத்தொன்றையே நான் கூற விளைகிறேன்.”

“ம்.. கூறுங்கள்!” என்றான் குழப்பான முகத்துடன் சங்கிலியன்.

“அரசே, நம் தமிழருள் பழைய சாதியினரான பாணர் மூவகையினராவர். அவர்களுள் ஒரு பிரிவினரே யாழ்ப்பாணர் என்பதாகும். தமிழர் தம் பழைய இசைக்கருவிகளும் மூன்று. அவை யாழ், குழல், முழவு என்பனவே. இவற்றில் யாழ் மீட்டிப் பாடிடும் பாணரே யாழ்ப்பாணர் என்ற பெயரைப் பெற்றிருந்தனர். ஆகவே யாழ்ப்பாணம் என்பது ஒரு சாதிப்பெயரேயாகும் என்கிறேன். அவ்வாறே நோக்கினால் நம் தமிழ்ப்பெருங்காப்பியங்களிலும், இலக்கியங்களிலும் கூட யாழ்ப்பாணர் என்கிற சாதியினரைப் பற்றி நாம் கற்றறிய முடிகிறது.

இலங்கை வேந்தர் இராவணனுடைய சோதரர் விபீடணனிடம் யாழ் வாசிக்கும் யாழ்ப்பாணரே இலங்கையின் வடபுறத்து மணற்றிடரினை திருத்தி வளமாக்கினர் என்று கூறப்படுகிறது. அப்படி யாழ்ப்பாணர் எனும் சாதியின் ஒரு பகுதியினர் இலங்கையின் வடபகுதியில் வாழ்ந்த இடமே யாழ்ப்பாணம் என நாமம் கொண்டது. இதுவே என் கருத்தாகும் வேந்தே” என்று கூறி அமர்ந்தார் புலவர் தேவராசாந்திரக் கவிராயர்.

சபையில் ஒரு நீண்ட அமைதி நிலவியது. சிறிது நேரத்திற்குப்பின் புலவர் சந்திரசேகர மாப்பாணர் எழுந்தார்.

“அரசே, புலவர் தேவராசேந்திரக் கவிராயர் கருத்தை ஏற்பது பொருத்தமற்றது என்றே நான் இன்னும் கருதுகிறேன். ஒரு சாதிப்பெயரே நம் இராச்சியத் திருநாமம் ஆனதென்பதை எங்ஙனம் ஏற்பது அரசே?”

தேவராசேந்திரக் கவிராயர் பதில் கூற எழுந்தார்.

“புலவரே, ஒரு இராச்சியம் புகழ் மிளிர்ந்து ஒளிரும் போது அந்த இராச்சிய நாமம் தோன்றிய விதமும் புகழுக்குரியதாய் இருக்க வேண்டும் என்பதன் அவசியம் இல்லை. புகழுடைய முறையன்று என்றாலும் இது ஏற்கனவே நிகழ்ந்து விட்டது. நடந்து முடிந்த வரலாறு. இதை ஏற்க இயலாது என்பதற்காக பொய்க்கதைகளை புனைந்துரைத்து விதண்டாவாதம் மேற்கொள்வதில் அர்த்தம் என்ன புலவரே?”

“எது விதண்டாவாதம் புலவரே, நான் கூறும் காரணமா விதண்டாவாதம்? அரசே என் காரணத்தை வலிமைப்படுத்தவும் தக்க சான்றினை முன்வைக்க தயாராகவே இருக்கிறேன். நான் கூறிய படி ஏலேல சிங்கனென்ற மன்னர் யாழ்பாடிக்கு கொடையாக வழங்கிய நிலமே யாழ்ப்பாணம் என்பதற்காதாரமாய் பண்டைய ஈழத்து இலக்கியப்பாடல் ஒன்றை இந்தப்பேரவையில் முன்வைக்கிறேன்.”

என்று கூறிப் பாடத் தொடங்கினார் புலவர் சந்திரசேகர மாப்பாணர்.

“.........................நரை கோட்டிளங் கன்று நல் வளநாடு நயந்தளிப்பான் விரையூட்டு தார்ப் புயன்வெற்பீழ மன்னனே தேவிரும்பிக் கரையோட்ட மாக மரக்கலம் போட்டுனைக் காணவந்தாற் திரை போட்டிருந்தனை யேலேல சிங்க சிகாமணியே..”

“இதன் மேல் என்ன ஆதாரம் வேண்டும் கூறுங்கள் புலவரே” என்று கூறியபடி அமர்ந்தார் புலவர் சந்திரசேகர மாப்பாணர்.

அச்சமயத்தில் தலைமைப்புலவர் செண்பகமாப்பாணர் எழுந்தார்.

“அரசே, சந்திரசேகர மாப்பாணர் இப்போது பாடிய பாடல் உண்மையில் ஆயிரமாண்டு காலப் பழையது. அப்பாடலின் பொருளும் அவருடைய கருத்தினையே வலியுறுத்துகிறது. நான் கற்றறிந்தது வரை கூட புலவர் சந்திரசேகர சேகர மாப்பாணர் கூறியதே தக்க காரணமாய் அமையக்கூடும் என்பதே என் புலமையின் வெளிச்சம் அரசே. யாழ்பாடிப் பரிசு பெற்ற நாடே இவ் யாழ்ப்பாணம் எனும் புண்ணிய பூமி எனக்கூறுவதே சாலப் பொருத்தமாகும் வேந்தே...” என்று கூறி அமர்ந்தார்.

“அருமை புலவர்களே, அருமை! என் சந்தேகம் தீர்ந்த விதம் குறித்து மெய் சிலிர்க்கிறேன். ஈழவள நாட்டின் வல்லோர், நல்லோர் யாவருங் கூடிய இம் மகா சபையில் இச்சந்தேகம்

அனைவருக்கும் தீர்ந்திருக்கும் என எண்ணுகையில் உள்ளம் புளகாங்கிதம் கொள்கிறது."

என்று பூரிப்பு மிகுதியில் கூறிக்கொண்டிருந்த சங்கிலியன் சிறிது சிந்தனையில் ஆழ்ந்தவாறு மேலும் பேசத் தொடங்கினான்.

"எம் இராச்சியத்தின் தோற்றம் குறித்து நாம் கௌரவம் கொள்கின்ற வேளையில் இதன் மறைவு பற்றியும் எண்ணங்கள் உள்ளத்தில் உதிக்கின்றன என்பதையும் மறுக்க முடியவில்லை."


என்று கூறி அமைதியானான் சங்கிலியன். வன்னியர் விழா மணிமண்டபமும் அமைதியானது.


"எம் இறந்தகாலம் புகழுடையதாய் இருக்கலாம். ஆனால் எதிர்காலம்? ஒரு வேளை மறைவு என்பது நிச்சயமானால் அது நம் முன்னோர் தம் கௌரவத்தை சீரழித்து விடாமலாவது இருக்கவேண்டுமல்லவா?"

தொடர் சிந்தனைவயப்பட்டவனாக சங்கிலியன் கூறிக்கொண்டிருந்தான்.

அவையோர் அமைதியாய் தத்தம் எண்ண அலைக்கேற்ப அதை வெவ்வேறு விதமாக புரிந்து கொண்டிருந்தனர்.

*அமைதி நீங்கும்...*





# கொரோனா நோயினால் வாயில் ஏற்படும் அறிகுறிகள்

*சஜீவன் சத்தியசீலன்*
*பல்மருத்துவ பீடம்*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*

கோவிட் வைரசின் நான்காவது அலை வேகமாக பரவி வரும் நிலையில், நோய் பாதிப்பின் அறிகுறிகளை அறிந்து வைத்திருப்பது முக்கிய மாகும். 2019ஆம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் தொடங்கிய கொரோனா வைரஸ் “கோவிட் -19” நோயானது சுவாசத் தொகுதி [Respiratory system] , இரைப்பை குடல் [Gatrointestinal] மற்றும் நரம்புத் தொகுதி [Neurologiacl System] போன்றவற்றினை பாதிக்கின்றது.

அது தவிர வாய் [Oral] மற்றும் வாசனை [Olfactory] தொடர்பான தொகுதிகளையும் பாதிக்கின்றது. அதில் முக்கியமானவை சுவை இழத்தல், சளி, வாயில் எரிச்சல்







உணர்வு, வாயின் மென்படலத்தில் ஏற்படும் மாற்றங்கள் ( சிவப்பு புள்ளிகள் தோன்றுதல் [படம் 1]), வாய்ப்புண் தோன்றுதல், herpes simplex virus மீள தோன்றுதல், நாக்கினில் ஏற்படும் மாற்றங்கள் - geographic tongue [படம் 02], முரசில் ஏற்படும் மாற்றங்கள் - Desqumative gingivitis, வாயில் வறட்சி உணர்வு ஏற்படுதல் - Dry mouth, வாயினுள் ஏற்படும் வீக்கங்கள், உதட்டினில் ஏற்படும் மாற்றங்கள் [Angular chelitis - படம் 3].




எனினும் இந்த மாற்றங்கள் எவ்வாறு ஏற்படுகின்றது என்று இன்னும் அறியப்படவில்லை. SARS-COV-2 வைரஸ் பாதிப்புக்குள்ளான 60 சதவீத நோயாளிகளுக்கு இந்த அறிகுறிகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பினால் குடலில் ஏற்படும் மாற்றங்களும், சுவை அற்றுப்போதலும் கோவிட்-19 இற்குரிய அறிகுறிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. கோவிட் 19 ற்கும் சுவை இழத்தல் தவிர்ந்த வாயில் ஏற்படும் மற்றைய மாற்றங்களுக்கும் உள்ள தொடர்பு என்ன என்பது பற்றி அறிய ஆய்வுகள் தேவைப்படுகின்றது.

கோவிட் பாதிப்பு உள்ளான வர்களுக்கு இந்த நோயின் தீவிரத்தன்மை வெளிப்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே இவ்வறிகுறிகள் தென்படுவதாக நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் ஹெல்த் [National institute of health] இதழில் வெளியாகியுள்ள ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இந்த அறிகுறிகளை மட்டும் வைத்து நோய் பாதிப்பு உள்ளது என்ற முடிவுக்கு வர முடியாது. இந்த அறிகுறிகளோடு வேறு சில அறிகுறிகளையும் வைத்து கொரோனா பாதிப்பு இருப்பதை உணர்ந்து கொள்ளலாம். ஆகவே வாயினுள் ஏற்படும் அசாதாரண மாற்றங்களை புறந்தள்ள வேண்டாம்.

கோவிட் வைரஸ் ஆனது இருமல் மூலமோ தொடுகை மூலமோ சுவாசம் மூலமாகவோ பேசும் பொழுதோ பரவக்கூடும்.

இருமும் பொழுது பேசும் பொழுது ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு பரவி வாயில் உள்ள பற்குழிகளிலும், உமிழ் நீரிலும் தங்கிக்கொள்ளும். வைரசின் பாதிப்பு அதிகரிக்கும் பொழுது வாயில் அதன் பாதிப்பு தெரியத் தொடங்கும். இந்த நோயின் மற்றைய அறிகுறிகள் இல்லாதவர்களுக்கும் வாயில் அறிகுறிகள் காணப்படும். சுவை இழத்தலைத் தவிர வேறு அறிகுறிகள் சிலவற்றை பற்றி கீழே பார்ப்போம்.

1. உலர்ந்த வாய் [Dry mouth]

வைரசு பாதிப்பினால் உமிழ்நீர் சுரப்பிகள் வாயினுள்ளே காணப்படும் மென்படலங்களின் ஈரப்பதனை பேணுவதற்கு தேவையான உமிழ்நீரினை சுரக்காததினால் வாயில் வறட்சி உணர்வு ஏற்பட்டு துர்நாற்றமும் எரிச்சல் உணர்வும் ஏற்படும்.




வறட்சி உணர்வு போதிய அளவு நீர் அருந்தாமை, வாய் வழி சுவாசம், காலநிலை மற்றும் உட்கொள்ளும் மருந்துகளின் பக்க விளைவாக கூட ஏற்படலாம்.

## 2. வாய் புண்கள் [Oral Ulcers] [படம் 4]

வாயில் நாக்கு, முரசு மற்றும் உதடுகளில் வாய் புண்கள் ஏற்படக்கூடும். வேறு காரணங்களினாலும் வாயில் புண்கள் வரக்கூடும்.

## 3. நாக்கில் ஏற்படும் மாற்றங்கள் [COVID tongue]

நாக்கின் நிறம் மற்றும் தோற்றத்தில் மாற்றம் ஏற்படும். எனினும் நாக்கில் ஏற்படும் இந்த மாற்றங்கள் வேறு சில நோய்களினாலும் ஏற்படக் கூடும் [Geographic Toungue]. தசைகளில் ஏற்படும் மாற்றங்களினால் உண்ணும் பொழுது வலி ஏற்படக்கூடும் [Dysgeusia]. நாக்கில் ஏற்படும் மாற்றங்கள் கோவிட் வைரஸின் நேரடி தாக்கத்தினால் அல்லது நிர்பீடனக் குறைபாடினால் [Immune deficency] ஏற்பட்டு இருக்க கூடும் அல்லது வாயினுள் உள்ள பங்கசு[Fungus] போன்ற நுண்ணங்கிளால் ஏற்பட கூடிய சாத்தியக்கூறுகளும் உள்ளது. [படம் 5]

கோவிட் வைரசு பாதிப்புக்கு இதுவரை தெளிவான அறிகுறிகள் என திட்டவட்டமாக கூற முடியவில்லை. உங்கள் உடம்பில் ஏதேனும் அசாதாரண மாற்றம் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை சென்று பரிசோதனை செய்து கொள்வது நல்லது. தேவைப்பட்டால், உங்களை தனிமைபடுத்திக்கொண்டு, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்களை கோவிட் பாதிப்பில் இருந்து பாதுகாக்க முயற்சி செய்யுங்கள்.



தாயுமானவரின்... 2

# சமய சமரசம்

பிரசாந்தி ஜெயபாலன்



"அருமறையின் சிரிப்பொருள்" என இவர் தொழுகின்ற தலைமைச் செல்வமாகிய கடவுளை எந்த மதமும் தனியுடமை கொண்டாட முடியாது. எத்தகைய சமயச்சடங்குகளாலும் அவரை வசப்படுத்த முடியாது. அவர் அனைத்துச் சமயங்களுக்கும் பொதுவானவர் என சமரச சிந்தனையை விதைக்கிறார். ஒவ்வொரு சமயத்திலும் நின்று ஒழுகும்போது அதனுள் உறுதியான ஊக்கம் உண்டாகும் பொருட்டு தம்மதம் நிறுவுதலும் பிறர்மதம் மறுத்தலும் ஆகிய சமயவாதம் ஏற்படுவதால் "ஒருவர் போல் அனைவரும் தத்தம் நிலையே முத்தி முடிவென வாத தர்க்கமும் போதநூல்களும் முடிவிற் காட்டியே" என்கிறார்.

கடவுளை அடைவதற்கு வெவ்வேறு நெறிகளைக் கொண்ட எல்லா சமயங்களும் இறுதியில் உயர்ந்த கடவுள்நெறியில் உயிர்களைச் செலுத்துவதால் "பலவாஞ் சமயப் பகுதியும் நீ" என்றார்.

'வேறுபடு சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்கு பரம்பொருளே நின் விளையாட்டல்லால்...'

எனத்தொடரும் பாடலில் ஒரு சமயத்தைக் கடைப்பிடிக்கும் ஒருவர் தம் கொள்கையைப் போற்றி பிறசமயத்தை இகழ்வதற்கும் அச்சமயத்தை விட்டு பிறிதொரு சமயம் செல்லும்போது கைவிட்ட சமயத்தை இகழ்ந்து கைக்கொண்ட சமயத்தைப் போற்றுவதற்கும் இறைவனே காரணம் என்கிறார். சிறிய அருவிகள் அனைத்தும் ஒன்றாய்க்கூடி கடலினுள் கலத்தல் போல பல்வேறுபட்ட மதங்களும் இறுதியில் முழுமுதற் கடவுளாகிய ஒருவரையே சென்றடைவதால்

"வாரிதியில் நதித்திரள் போல் வயங்கிற்றம்மா" என்கிறார். இக்கருத்தினையே "நதியுண்ட கடலெனச் சமயத்தை உண்ட பரஞான ஆனந்த வெளியே"

"ஆறொத்திலங்கு சமயங்கள் ஆறுக்கும் ஆழ்கடலாய்..'


என்பவற்றினூடும் புலப்படுத்துகின்றார். மேலும் சமயபேதங்கள் பேசப்படுவதால் கடவுளின் பெருமை உணரப்படாது என்பதையும் பல

இடங்களில் உணர்த்துகிறார். "நெறிகள் தாம் பலப்பலவுமாய் அந்தந்த நெறிக்காய்" என்பதில் சமயங்களின் பிணக்குகளுக்கு அளவில்லை என்றும் அதனால் தெளிவு பிறக்காதென்றும் உரைக்கிறார். பலவகைப்பட்ட சமயவாதங்களால் உண்மை உணராது பரிதவிக்கும்படி கடவுள் தம்மை விட்ட நிலையை "பன்னெறியாம் பாலைவனத்தில் விட்ட பாவமென்னோ" என்கிறார். எனவே இதன் மூலம் பலசமய முரண்பாடுகள் பாலைவனம் என்பதையும் அவை அனைத்தையும் சமரசத்துடன் நோக்கின் அதுவே சோலைவனம் என்கின்ற கருத்தும் புலனாவதைக் காணலாம்.

கடவுட் தன்மையின் ஒவ்வொரு பகுதியையுமே வெவ்வேறு சமயங்கள் வற்புறுத்துவதை "எங்கும் நிறைகின்ற பொருள்" இரண்டாவது பாட்டிலே விளக்குகிறார். எவ்வாறெனில் சில சமயங்கள் கடவுளை "அன்னை" என்றும், சில சமயங்கள் "அப்பன்" என்றும் கூறும். சிலர் இந்திரன், பிரம்மன் முதலியவர்களோடு சுடலைமாடன், மதுரைவீரன் முதலிய சிறுதெய்வங்களும் பிறநாட்டினர் கூறும் தெய்வங்களும் ஆகிய எல்லாம் கடவுளே என்பர். இத்தகையவர்களுடைய சமயக்கருத்தினையே

"பேய் போல அலறியே ஒன்றும் இலவாய்ப் பின்னேதும் அறியாமல் ஒன்றை விட்டொன்றைப் பிதற்றிடும்" என்றார். சிலர் கடவுளை ஒளி என்பர், சிலர் வெளியென்பர், சிலர் தத்துவங்களே கடவுள்நிலை என்பர், சிலர் காலமே கடவுள் என்பர். இவர்கள் கூறும் எல்லாமாய் வேறாகி, என்றும் ஒன்றாய் அறிவின் முழுமுதலாய் விளங்குவது இறைவன் திருவருளே என்கிறார் தாயுமானவர். இவ்விதம் சமய சமரசத்தை வலியுறுத்தினாலும் சைவசமயமே சிறந்ததெனக் கொள்ளும் இவர் சில சமயங்களைப் பெயர்கூறி மறுத்துள்ளமையும் சுட்டத்தக்கதே.

"தரணிமிசை உலோகாயதன் சமயநடை சாராமல்.."
என்ற சில அடிகளில் நாத்திகத்தையும் அகம்பிரவாதத்தையும் கண்டிக்கிறார். அத்துடன் அளவற்ற பிறசமயங்கள் எல்லாம் தத்தம் தெய்வமே மெய்த்தெய்வமென்று தமக்கேற்ற காரணங்களுடன் சாதிக்கும் போது தம்முள் முரண்படுகின்றன. அவற்றின் பொருளையெல்லாம் தக்கமுறையில்



ஒப்புக் கொண்டு எச்சமயமும் வணங்கும் இயல்பை உடையன என்கிறார்.

இதன்படி நோக்கின், தாயுமான சுவாமிகள் எச்சமயத்தையும் உரிய முறையில் தழுவிக்கொள்ளும் சைவ சித்தாந்த சமயத்தவரென்பதும், சித்தாந்தக் கருத்தே உபநிடதத்தின் சிறந்த கருத்தென்று கொள்ளுதலால் உண்மை வேதாந்தமும் சித்தாந்தமும் சமநிலை உடையன என்னும் கொள்கையுடையவர் என்பதும் நன்கு புலனாகின்றன. இவற்றைக்கொண்டு தொகுத்து நோக்கின், சமய சமரச ஞானவிளக்காகக் கருதப்படும் தாயுமானவரை எத்தகைய மதக் கூட்டிலும் அடக்கிவிட முடியாதென சமரச நெறியாளர்கள் கருதுவதுடன் இன்றைய சமய சமரசவாதிகளும் இவரது பாடல்களில் தங்கள் கொள்கைகளுக்கு ஆதாரம் தேடலாம் எனவும் கூறுவதுடன் கடவுள், உயிர், உள்ளம், தத்துவம், நெறிமுறைகள் பற்றிய சமரசக் கருத்துக்களையும் குறிப்புக்களையும் இவரது சிந்தனைகளில் காணமுடிகின்றது. அத்துடன் சாதி சமயம் முதலான வேறுபாடுகளின்றி இவரது பாடல்கள் அனைவருக்கும் பயன்படுவது சமரச சிந்தனையின் வெளிப்பாடே எனலாம்.

இவ்விதம் முற்காலத்தில் வாழ்ந்த சமய சிந்தனையாளர்களும் இலக்கிய கர்த்தாக்களும் சமய சமரசத்தை வலியுறுத்தி இருப்பது இன்றைய காலத்தில் நாம் சிந்தித்து செயற்படுவதற்கும் மத நல்லிணக்கத்தை வளர்த்துக் கொள்வதற்குமான முன்மாதிரிகை யாகக் கொள்ளலாம்.

## ஒரு குட்டிக்கதை



ஒரு குடிகாரன் ஞானி ஒருவரைத் தேடி அவர் இருக்குமிடத்துக்கு வந்தான்.

“நானொரு குடிகாரன். நான் திருந்துவதற்கு ஒரு வழி கூறுங்கள் ஐயா...” என்று கேட்டுக் கொண்டான்.

அதற்கு ஞானி, “நாளை மாலை என்னை வந்து பார் சொல்கிறேன்.”

மறுநாள் மாலை குடிகாரன் ஞானியைத் தேடி வந்தான். அப்போது ஞானி ஒரு தூணைக் கட்டிப் பிடித்துக் கொண்டு நின்றார். தூணைப் பார்த்து, “ஐயோ என்னை விட்டுவிடு... விட்டுவிடு...” என்று கத்திக் கொண்டிருந்தார்.

உடனே குடிகாரன், “நீங்கள்தானே தூணைப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள்? அதை விட்டுவிடுங்கள்” என்றான்.

உடனே ஞானி சிரித்துக் கொண்டே, “நான் தூணைப் பிடித்துக் கொண்டிருப்பது போல, நீ தான் குடியைப் பிடித்துக் கொண்டிருக்கிறாய். நீயே விட்டுவிடு” என்றார்.




தொண்டரடிப்பொடியன்

தித்திப்பான கப்பச்சினோ எவ்வாறு நுரைகளுக்குள் மறைக்கப்பட்டு இருக்கிறதோ அது போலத்தான் இந்த பூமியில் வாழும் அனைவரது வாழ்வும். பல உண்மைகள் பலருக்குள் உறங்கிக்கொண்டு தான் இருக்கின்றன. உலகமே ஒரு நாடக மேடை என்று சேக்ஸ்பியர் சொன்னது முற்றிலும் உண்மை.

கண்ணுக்கு தெரியாத கிருமிக்காக இன்று எல்லோரும் கண்ணுக்கு தெரிந்த முகமூடியை அணிந்து கொண்டிருக்கிறோம். ஆனால் அந்த கிருமியிலும் கொடிய பல காரணங்களுக்காக கண்ணுக்கு தெரியாத முகமூடியை எல்லோருமே அணியத் தொடங்கி பல யுகங்கள் ஆகின்றன. ஏதேதோ காரணங்களுக்காக அந்த முகமூடிகளை கழற்ற முடியவில்லை. சில வேளைகளில் அந்த முகமூடிகளை மாற்ற வேண்டியிருக்கும். ஆனால் யாராலும் அவற்றை நிரந்தரமாக கழற்றி வைக்க முடியாது.

உங்களுக்கு முன்னால் ஆத்திரத்தில் சிவந்து சினந்து கொண்டிருக்கும் ஒருவன் உண்மையில் கோவப்படவே இல்லை என்றால் நம்புவீர்களா? விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டு இருப்பவன் உள்ளுக்குள் விம்மி விம்மி அழுதுகொண்டு இருக்கிறான் என்றால் ஏற்பீர்களா? எல்லோருக்கும் அறிவுரை சொல்பவர்கள் வாழ்க்கை ஏற்கனவே தகர்க்கப்பட்டிருக்கும். ஏன் இந்த நிலை?

நடிக்க வேண்டி இருக்கிறது. அதனால்த்தான் இந்த நிலை. சில நேரங்களில் பலமானவனாக, சில நேரங்களில் பலவீனமான பயந்தாங் கொள்ளியாக, சில நேரங்களில் எதற்கும் கோபப்படும் கோபக்காரனாக, சில நேரங்களில் எதற்குமே எதிர்வினை காட்டாத சாந்த சொரூபியாக, எல்லாம் தெரிந்த மேதாவியாக, எதுவுமே புரியாத முட்டாளாக, அன்பு நிறைந்த மனிதனாக, இரக்கமே அற்ற மிருகமாக என்று நேரத்திற்கு நேரம் பல்வேறு பாத்திரங்களை ஏற்க வேண்டியிருக்கிறது.

அன்றும் அப்படி ஒரு பாத்திரத்தை நான் ஏற்றிருக்க வேண்டும்



என்கிறார்கள். குரு வம்சத்தின் குலமகளாக பெண்களுக்கு என்று விதிக்கப்பட்டவற்றை மதித்து நடப்பவளாக நான் நடந்திருக்க வேண்டுமாம். யுகங்கள் கடந்த போதும் என் மீதான பழிச்சொற்கள் தீர்ந்த பாடில்லை.

சொந்தமாகி விட்டார்கள் என்பதற்காக அவர்கள் சொல்வதையெல்லாம் நான் கேட்க வேண்டுமா? குரு வம்சம் என்னை குலமகளாக பார்த்ததா?

துச்சாதனனுக்கு நான் அண்ணி முறையாவேன்! ரோசத்தில் என் கேசத்தை பிடித்து இழுத்து வந்தானே? வந்ததும் தான் வந்தான், மாபெரும் சபை தனில் என்னை மானபங்கப்படுத்த முனைந்தானே! அவன்தான் அரைமதி மடையன்! ஏதோ கேட்டதை செய்துவிட்டான் என்றாலும் நிறைமதி கொண்டவர் களாக உலகம் போற்றும் உத்தமர்கள் என்று சொல்லப்படும் பலரும் அன்று அங்கே ஊமையாகத் தானே இருந்தார்கள்?

குரு வம்சத்திற்காக தன் சொந்த வாழ்வையே தியாகம் செய்த பிதாமகர் பீஷ்மர் குரு வம்சத்தின் குல மகளுக்கு நடக்கும் அநீதி கண்டு அமைதியாய் இருந்தது எந்த வகையில் நியாயம்?

அஸ்தினாபுரத்தின் அரசன் என்பவன் அந்த தேசத்தில் வாழும் அத்தனை பேருக்கும் தந்தை போன்றவன். எல்லோருக்குமாக சிந்திக்க வேண்டிய பொறுப்பிலுள்ளவன் புத்திர பாசத்தால் புத்தி கெட்டுப் போனானே! எனக்கு நடந்த அநீதிகளை அவன் பார்க்கவில்லைத்தான்! என் கதறல்களை கேட்கவுமாவில்லை? விழி தெரியாதவனுக்கு நல்வழியுமா தெரியாது?

குருவம்சத்திற்கே குல குருவான வரும் இருந்த சபையில் தான் இந்த சதி வேலை நடந்தது. அஸ்வத்தாமனுக்காக அமைதியாக இருந்தாராம் துரோணர். ஒரு பெண்ணின் மானம் என்பது புத்திர பாசத்தை விட மேலானதென தெரியாத ஒரு குருவை வைத்திருக்கும் குருவம்சம் குலநாசமாகாவிட்டால்த் தான் ஆச்சரியம்.

கேட்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாது வாரி வாரி வழங்கிவிட்டால் போதுமா? அது மட்டுமா தர்மம்? கண்ணெதிரே நடக்கும் அநீதி கண்டு கல்லாய் இருந்தானே கர்ணன்! அவனுக்கு மட்டும் ஆடைக்கும் மேலாக கவச குண்டலங்கள்! ஆனால் என் ஆடையை ஒருவன் அபகரிக்கிறான். அவன் அமைதியாய் இருக்கிறான். நீ செய்த தர்மங்கள் விழலுக்கு இறைத்த நீர் தானே கர்ணா!

இவர்கள் மட்டும்தானா? என்னவர்கள் உட்பட இன்னும் நிறையப்பேரிடம் நிறைய ஆதங்கங்கள் எனக்கு உள்ளன. அவற்றோடு அடுத்த இதழில் சந்திக்கின்றேன்.

**இப்படிக்கு,**
**திரௌபதி**

தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில்

# கமலாம்பாள் சரித்திரத்தின் முக்கியத்துவம்

6

முருகையா சதீஸ்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

### முன்வந்த நாவலைக் கடந்தும், பின்வந்த நாவலைப் பாதிக்கும் தன்மையில் அமைதல்

வேதநாயகம் பிள்ளையும், மாதவை யாவும் "சரித்திரம்" என்று கூறி முன்னவர் சுயவரலாறு போலவும், பின்னவர் வாழ்க்கை வரலாறு போலவும் தம் நாவலைப் படைக்கலாயினர். மாதவையா அது நடந்த கதை என நிறுவவும் பிரயத்தணிக்கிறார். ஆனால் ராஜமய்யர் இது கதை என்று தம்முடைய பிற்கூற்றில் தாமே கூறிவிடுகின்றார்.
"இப் பொய்க்கதையை இதுகாறும் பொறுத்தருளிய..." என்றும் "இச் சரித்திரம் எழுதுவதில் எனக்குக் கதையே முக்கியக் கருத்தன்று..." என்றும் பிற்கூற்றில் சொல்கின்றார்.

சமய ஒற்றுமையை வலியுறுத்துவதில் ராஜமய்யர் வெற்றி பெற்றுள்ளார் எனலாம். இதில் கமலாம்பாள் இராமனை அடைவதையும், முத்துஸ்வாமி ஐயர் சிவனைச் சென்றடைவதும் சைவர் - வைணவர்களின் தேவையற்ற விரோதம் நீக்கி ஒற்றுமையை வலியுறுத்த ஆசிரியர் முயன்றதாகவும் கொள்ளலாம். அ.மாதவையா பெண்கல்வியை அநேகமாகத் தமது எல்லாப் படைப்புகளிலும் வலியுறுத்தி வருகிறார். "பத்மாவதி சரித்திரத்தின்" சிறப்பான பகுதிகளில் ஒன்று, பத்மாவதி நாராயணனுக்குக் குறைக்கல்வியுடன் தப்பும் தவறுமாய்க் கடிதம் எழுதும் பகுதியாகும். ரசனைக்குரிய இதேமுறை கடிதத்தை ராஜமய்யர், மாதவையாவிற்கு முன்பே கையாளுகின்றார். ஸ்ரீநிவாசனின் மூன்றாம் நாள் கலியாணத்தன்று லட்சுமி எழுதியதாய் ஒரு குறும்புப்பெண் தானே எழுதி ஸ்ரீநிவாசனிடம் கொடுக்கிறாள். இப்படித் தமக்கு முன்வந்த நாவலைக் கடந்தும், தமக்கு அடுத்து வந்த நாவலைப் பாதிக்கும் முறையிலும் ராஜமய்யரின் நாவல் அமைந்துள்ளதை அறியலாம்.

மேலும், இளமைப் பருவ விளையாட்டுக்கள் பற்றியும், கதைப்போக்கிலான ஒரு சம்பவமாய்த் "தீ விபத்து" ஒன்றினையும் விரிவாய் குருஸ்வாமி சர்மா எழுதுகிறார். ராஜமய்யரின் நாவலிலும் ஸ்ரீநிவாசன் "பலீன் சடுகுடு" விளையாடுவதும், வைக்கோர்ப்போர் தீப்பற்றி எரிவதும் இடம்பெறுகின்றன. இதேபோல மாதவையாவும் தம் நாவலில் போகிறபோக்கில் நாடகக்கொட்டகை எரிந்ததாய்ச்

சொல்கிறார். அத்துடன், குருஸ்வாமி சர்மாவின் "பிரேமகலாவதியத்தில்" ராஜமய்யரைப் பெரிதும் பாதித்தது நரபலியாவே தோன்றுகிறது. ராஜமய்யரின் நாவலிலும் நரபலியின் களமான காளி கோவில் பற்றியும் விபரங்கள் இடம்பெறுகின்றன.

### பாடநூற்கல்விக்குத் தகுதியுடைய நாவல்

"பிரதாபமுதலியார் சரித்திரம்" எனும் நாவல் வெளிவந்து பதினாறு வருடங்களில் நாவலுக்குரிய அமைப்போடு கமலாம்பாள் சரித்திரம் வெளிவந்தது. நாவலின் அமைப்பின் சிறப்பினால், நிலமானியச் சமூகத் தைப் பேசும் தன்மையாலும் தமிழில் முதல் நாவல் என்று இதனையே கூறுவர். இந்தியாவில் 1932 ஆம் ஆண்டு இது பாடப்புத்தகமாக அங்கீகரிக்கப்பட்டது. ஆசிரியர் சான்றிதழுக்காக முதல்நிலைத் தேர்விற்கு உரிய பாடநூ லாக தமிழக அரசால் இந்நூல் பரிந்துரைக்கப்பட்டது. எனவே பாடநூ ற் தகுதிக்குரிய முதல் ஆரம்ப நாவல் என்ற பெருமையையும் பெறுகிறது.

### எடுத்துரைப்பு முறையில் புதுமை

ராஜமய்யர் நகைச்சுவை கலந்த நடையை தம் தேவைப்படி கையாண்டுள்ளார். ஆரம்பத்தில் கமலாம்பாளையும் முத்துஸ்வாமி ஐயரையும், காட்டும் போதே நகைச்சுவை கலந்த அன்னியோன்யத்துடன் அறிமுகம் செய்கிறார். தான் அடுத்துக் கொண்டுவரவுள்ள கதைச்சிக்கல்களாலும், அவலச்சுவை மிக்க சம்பவங்களாலும் வாசகனை இம்முறையில் அதிகம் கவரலாம் என அவர் முன்பே கணித்து விட்டார். "அம்மையப்பிள்ளையை" முற்றிலும் நகைச்சுவை கலந்த பாத்திரமாகப் படைக்கின்றார். நகைச்சுவை அம்சமாய் ராஜமய்யர் எள்ளல் தொனியில் பட்டப்பெயர்கள் வைக்கிறார். "பாப்பா பட்டியகத்து வெட்டரிவாள்", "வம்பர் மஹாசபை அக்கிராசனாதிபதி", "சமாசார ஸ்திரீகள்", "தெனாலிராமன்", "லேடி", "பெரும் தீனி வைத்தி", "மாம்பழம்", "ஷோக் சங்கரன்" முதலிய பெயர்களைக் குறிப்பிடலாம். இதனால் பாத்திரங்கள் வாசகர் களால் ஒரு நெருக்கத்துடன் அடையாளங் காணப்படுகின்றார்கள்.

நாவலின் வர்ணனை மரபைத் தொடக்கி வைத்தவர் ராஜமய்யர்தான். வர்ணனைகளின் வழி வெளிப்படும் இவரின் கூர்ந்த சமூக அவதானிப்பு ஆச்சரியமாக உள்ளது. வர்ணனை களில் நகைச்சுவை உணர்வு நிரம்பி வழிகிறது. ஆனாலும் நாவலின் பிற்பகுதியில் ராஜமய்யர் வேதாந்த விசாரணையில் ஈடுபடும் போது வெளிப்படும் வர்ணனைகள் சலிப்படையச் செய்கின்றன. பிற இலக்கிய ரசனைகளை நாவலுக்குள் வெளிப்படுத்துவதில் ராஜமய்யர் வெற்றி கண்டுள்ளார் எனலாம். குறிப்பாகக் கம்பனிடத்தில் மனதைப் பறிகொடுத்தவர் ராஜமய்யர். அவர் தமது மிகப்பிரியமான லட்சுமி என்ற பாத்திரத்தைக் கம்பராமாயணப்

பாடல்களை அபாரமாய்ப் பாடுவதாக அமைத்துக் கொள்கிறார். கம்பரையும், மாணிக்கவாசகரையும் மிகுந்த விருப்பமுடன் பல விதங்களில் பல இடங்களில் அவர் பயன்படுத்திக் கொள்கிறார். இந்த ரசனை, அடிப்படையில் நாவலின் பெரிய பலமாக அவருக்குக் கைகொடுத்தது. இந்நாவலில் பாத்திரங்களின் குணச்சித்திர வர்ணனைகளும், சம்பவங்களின் யதார்த்தச் சித்திரிப்புக்களும் ராஜமய்யரின் தனி ஆளுமை கொண்டவை. இவ்விதத்தில் பாத்திரங்களின் வாழ்வியல் கவர்ச்சி வாசகனைப் பெரிதும் ஈர்த்து மறக்க முடியாதபடி கட்டிப்போட்டு விடுகின்றது. இந்துப்பண்பாட்டோடு கூடிய வாழ்வியல் செயற்பாடுகளை இந்நாவலில் காட்சிப்படுத்துகின்றார். நிலமானிய சமூகத்தின் கூட்டுக்குடும்ப அமைப்பையும், அது படிப்படியாக சிதைவுற்றுச் செல்வதையும் யதார்த்த நெறியில் படைத்துள்ளார்.

## முடிவுரை

"கமலாம்பாள் சரித்திரம்", நாவல் எனும் இலக்கிய வடிவத்தின் தன்மைகள் முழுமையாகப் பொருந்தி வெளிவந்த முதல் நாவல் என்பதால் தமிழ்நாவல் வரலாற்றில் இதற்கென்று தனியான இடமுண்டு. ஏனெனில் 19 ஆம் நூற்றாண்டு மக்களின் மனோநிலையையும், குறிப்பாகப் பிராமண சமூகத்தவர்களின் வாழ்வியலை மையமாகக்கொண்டு, ஒட்டுமொத்தமாக நிலமானிய சமூகத்தின் கூட்டுக்குடும்ப அமைப்பையும் பின்னர் அது படிப்படியாக சிதைவுற்றுச் செல்கின்றமையையும் யாதார்த்த பூர்வமாகக் கூறுகின்றது. எனவே தொடக்க காலத்திலேயே உருவ, உள்ளடக்கத்தில் சிறப்புற்றுத் தோன்றிய நாவல் என்னும் பெருமையை "கமலாம்பாள் சரித்திரம்" பெறுகின்றது.

## உசாத்துணை நூல்கள்


1. சுப்பிரமணியம். க. நா, (1957), முதல் ஐந்து தமிழ் நாவல்கள், அமுத நிலையம், சென்னை.
2. மோகன். இரா, (1989), நாவல் வளர்ச்சி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
3. ஞானி, (2008), தமிழ் நாவல், காவ்யா வெளியீடு, சென்னை.
4. கைலாசபதி. க, (1968), தமிழ் நாவல் இலக்கியம், குமரன் பப்பிளி'ர்ஸ், சென்னை.
5. பாலசுப்பிரமணியன். இரா, (2004), நாவல் கலையியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
6. சீனிச்சாமி. துரை, (1977), நாவல் வளம், தமிழ்ப் புத்தகாலய வெளியீடு, சென்னை.
7. ராஜமய்யர். பி. ஆர், (1957), கமலாம்பாள் சரித்திரம், ராமநாத் பப்பிளிகேஷன்ஸ், சென்னை.




# தாய்ப்பால்

## ஒரு அறிமுகம்



**வைத்தியர் கணேஷ்**

தாய்ப்பால் முதல் ஆறு மாதத்திற்கும் குழந்தைகளுக்கு பூரண உணவாக விளங்குகிறது.

முதல் ஆறு மாதத்திற்கும் தாய்ப்பால் மட்டுமே குழந்தைகளுக்கு ஊட்டவேண்டும் என்பது உலகளாவிய ரீதியிலான நியதியாகவும், விதிமுறையாகவும் காணப்படுகின்றது.

இது குழந்தைகளுக்கான போசாக்கை மட்டுமல்லாது நோய் எதிர்ப்புச்சக்தி உளவிருத்தி போன்றவற்றிற்கும் உதவுகின்றது.

### தாய்ப்பாலூட்டலின் நன்மைகள்

1. சரியான அளவில் தேவையான ஊட்டச்சத்துக்களைக் கொண்டது.

2.நோய் எதிர்ப்புச்சக்தி கொண்டது - Immunoglobulins, Lactoferrin, Lysozyme, Bifidus factor, Interferons.

3. அதிக அளவில் அகத்துறிஞ்சக்கூடிய இரும்புச்சத்தை கொண்டுள்ளது.

4. சமிபாட்டு நொதியங்களை கொண்டுள்ளது.

5. மூளை விருத்திக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் உள்ளன.

6. தாயுக்கும் சேயுக்குமான பிணைப்பை அதிகரிக்கும்.

7. தாயில் மார்பகப் புற்றுநோய், சூலகப் புற்று நோயைக் குறைக்கும்.

### தாய்பாலூட்டல் சர்வதேச விதிமுறைகள்

பிறப்பிலிருந்து முதல் ஆறு மாதத்திற்கும் தாய்ப்பால் மட்டுமே (Exclusive Breast feeding) ஊட்டப்பட வேண்டும்.



ஆறுமாத்திலிருந்து இரண்டு வயது வரை ஏனைய திண்ம உணவுகள் ஊட்டப்படும் அதேவேளை தாய்ப் பாலும் (Complementary feeding) கொடுக்கப்பட வேண்டும்.

### கொடுக்கும் தாய்ப்பால் போதுமானதா, அறிவது எப்படி ??

1. சரியான அளவு தாய்ப்பால் கொடுக்கப்படும் இடத்து பிள்ளை 2-3 மணித்தியாலங்கள் வரை தூ ங்கும்

2. தாய்ப்பால் கொடுக்கப்பட்டதை தொடர்ந்து சிறுநீர் கழிக்கும்

3. குழந்தை ஒரு நாளைக்கு 3-4 தடவை மலத்தை வெளியேற்றும்.

4. குழந்தையின் நிறை அதிகரிப்பு சீரான வகையில் அமையும்.

### வேலைக்கு செல்லும் தாய்ப்பாலூட்டும் தாய்மாருக்கான சில அறிவுரைகள்

1. நீங்கள் உங்களது தாய்ப்பாலை எடுத்து, அதை நீங்கள் 6-8 மணித்தியாலங்கள் சூழல் வெப்பநிலையில் வைத்து பிள்ளைக்கு ஊட்டலாம்.

2. தவறும் பட்சத்தில், அதே பாலை குளிரூட்டியின் கதவில் (refrigerator door) வைத்து 24 மணி நேரம் வைக்கலாம்.

3. குளிரூட்டியின் ஆழ்உறைப்பகுதியில் (deep freezer) 6 மாதம் வரை பாதுகாப்பாக வைக்கலாம்.

4. குளிரூட்டியிலுள்ள போத்தலில் உள்ள பாலை குழந்தைக்கு கொடுக்கும் நேரம், சற்று சுடுநீரில் பால்போத்தலை வைத்து அந்தப் பால் மெதுவாக கரைந்து வரும் போது பிள்ளைக்குக் கொடுக்கலாம்.

### மேலதிக சந்தேகங்களுக்கு !!!!

யாழ் போதனா வைத்தியசாலையில் தாய்ப்பால் முகாமைத்துவ நிலையம் இயங்குகின்றது. கிழமை நாட்களில் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையும் சனிக்கிழமையில் காலை 8.00 மணி முதல் பகல் 12.00 மணி வரையும் இந்நிலையம் தொழிற்படும்.

தாய்ப்பாலூட்டல் சம்பந்தமான மேலதிக தகவல்களை முகாமைத்துவ நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம். இந்நிலையத்தின் தொலைபேசி இலக்கம் 0212216270.



ரசிக்கும் சீமானே!!

# அழகான ராட்சசியே!

**இ.தனிஷ்ரன்**

அவனது ராஜ்ஜியத்தில் அவனே ராஜா! அவனே மந்திரி! சிகரத்தில் ஏற வழி தேடி ஓடிக்கொண்டிருப்பவன். தொழில் வாழ்க்கை என்று மட்டுமே சுழன்று கொண்டிருந்தவன். வாழ்க்கை துணை, பெண் என்ற நினைப்பே இல்லாது தன் வழி தனி வழி என்று வாழ்ந்தவன். இன்றோ,

"மன்னர் மன்னனே எனக்கு கப்பம் கட்டு நீ
ஜென்ம ஜென்மமாய் எனக்கு கட்டுப்பட்டு நீ"

என்று ஒருத்தி ஆணையிட, தானே விலங்கினை மாட்டிக் கொண்டு மண்டியிடுகிறான். அவனது சிம்மாசனத்தில் சிம்ம சொப்பனமாய் வீற்றிருந்தாலும் காதலாள் கடைக் கண் பார்வை வீச அவள் பாதம் பணிவான். அவளே சரணாகதி என அவள் பாதங்களில் முத்தமிட காத்திருக்கிறான்.

"மானிட பிறவி என்னடி மதிப்பு
உன் கால் விரல் நகமாய் இருப்பது சிறப்பு"

இவனை இவ்வளவுக்கு மயக்கி வைத்திருக்கிறாள் என்றால், அவள் எவ்வளவு பெரிய வசியக்காரி! அவளுக்கு இரண்டு முகம். காதல் மதுவை அள்ளி வார்த்து அவனை போதையில் திக்குமுக்காட செய்யும் "யட்சி" நிலை. மற்றையது, அவனை சீண்டி சண்டையிட்டு அவனை பிரிவுத்தீயில் தகிக்க விட்டு ரசிக்கும் "பிசாசுகளின் ராணி" நிலை. மொத்தத்தில்,

//அழகான ராட்சசியே//

பெண் என்றாலே கவிதை, வழிபாடு, கொண்டாட்டம். காதலில் இது மூன்றுமே இணைந்து கொள்ளும். கவிதை பொதுத் தளத்துக்கு சொந்தமானது. ஆனால் வழிபாடும் கொண்டாட்டமும் எல்லா காதலிகளுக்கும் வாய்ப்பதில்லை. தன்னவளை வழிபடவும் கொண்டாடவும் எல்லா ஆண்களுக்கும் தெரிவதுமில்லை. அது சில காதலிகளுக்கே கிடைக்கும் வரம். சில காதலர்களுக்கே வாய்த்த கலை.

"பார்த்த விழி பார்த்தபடி பூத்து இருக்க



காத்திருந்த காட்சி இங்கு காண கிடைக்க
ஊன் உருக உயிர் உருக தேன் தரும் தடாகம்"

இப்படியாக, "காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி காதலியே தேவி" என்று பக்தியில் உருகுதல் அபூர்வம். அதே போலத்தான் கொண்டாடப்படும் காதலிகளும்.

காதலில் தோய்ந்து உம்மத்தம் அடைந்த காதலனுக்கு மட்டும் தேவதை, கோதை, ராதை, ரம்பை, ஊர்வசி என்ற விளிப்புகள் அன்னியமானதாகி விடுகிறது. ராட்சசி, வசியக்காரி, சூனியக்காரி போன்ற பொதுத்தளத்து "பயானக" வார்த்தைகளினால், அவனை கட்டி ஆள்பவள் என்ற "காதல் வட்டத்தினுள்" ஆணின் ஆணவத்தை உடைக்கிறாள் பெண். ஆண் என்ற மமதையை தவிடு பொடியாக்குகிறாள்.

"புயலென்று நினைத்தேன் என்னை
புயல் கட்டும் கயிறாய் வந்தாள்.
மலை என்று நினைத்தேன் என்னை
மல்லிகையால் மலையை சாய்த்தாள்
நெற்றிப்பொட்டில் என்னை உருக்கி வைத்தாளே"



"எனை ஆள்பவளே! உனக்கு நான் அடிமை!"

என்று காதல் "அடிமைசாசனம்" எழுதிக்கொடுத்துவிட்டு, அவளை "ராட்சசி" என்று அழைக்க இனிக்கிறது இவனுக்கு.

//அடி நெஞ்சில் குதிக்கிறியே//

காதலிக்கும் அத்தனை ஆண்களுமே அனுபவித்திருக்கும் சுகமான வேதனை இது. அதுவும் காதலை தன்னவளிடம் வெளிப்படுத்தும் வரை, இந்த வேதனை உச்சக்கட்ட ஊசலாட்டம்.

நெஞ்சாங்கூட்டில் அங்கும் இங்குமாய் காதலி ஏறிக்குதிக்க, இதயத்தின் அலைவரிசை உச்ச மீடிறன்களை தாண்டி தடுமாற, இதயம் தத்தளிக்கும் ஆதரவற்ற நிலை. அவள் குதிப்பினால், நெஞ்சினுள் ஏதோ வலி. மூச்சு விட சிரமம். இந்த அதிர்வு வயிற்றுக்கும் தொண்டைக்கும் கடத்தப்பட,

"வயிற்றுக்கும் தொண்டைக்கும் உருவமில்லா
ஒரு உருண்டையும் உருளுதடி"

இந்த குதிப்பின் அதிர்வு வாழ்நாள் முழுதும் தொடரும். தொடரும் பயணத்தில் இன்னும் பல குதிப்புக்களும் குத்துக்களும் இதயத்தை பதம் பார்க்கும்.

//முட்டாசு வார்த்தையிலே பட்டாசு வெடிக்கிறியே//

இவன் தன்நிலை மறந்து, சிறுவனாகி விடுகிறான். சிறுவனுக்கு முட்டாசு தின்பதே அதிகபட்ச சந்தோஷம். பட்டாசு வெடிப்பது வருடத்தில் பண்டிகைகளின் போதே கிடைக்கும் உச்சபட்ச மகிழ்ச்சி. அந்த இரண்டும் இணைந்து கிடைக்கும் சுகம் காதலி பேசும் போது வருகிறது.

//அடி மனச அருவா மனையில் நறுக்குறியே//

மனைஞ்ச அருவாளினால் எதையாவது அறுக்க முடியுமா? அறுத்தால் தான் அறுபடுமா? அறுத்து பாருங்கள், நசுங்கி பிழிந்து சிதைந்து சின்னாபின்னமாகிவிடும். அது வதை. அதே வதை தான் காதலிலும். அடிமனச அருவாமனையில் அறுக்கும் கொடுமைக்காரி அவள். இவனுக்கு வலிக்கிறது! வலிக்கிறது என்று குழறுகிறான்! அவன் துடிப்பதை இவள் ரசிக்கிறாள். ரசித்துக்கொண்டே பதில் சொல்கிறாள்,

//அருகம்புல்லுக்கு அறுக்கத் தெரியுமா ?
கொழுந்த கொமரி நான் ஆமா
அயிர மீனுதான் கொக்க முழுங்குமா?
அடுக்குமா ? //

இந்த வரிகளில் அவள் மழலையாகி அணுங்கிறாள். அதிலும் "கொழுந்த கொமரி" என்ற செல்லக்கொஞ்சல்.

குமரியான பிறகு குழந்தையா?

"கட்டிலிடும் வயதில் தொட்டில் இட சொன்னால் சரியா சரியா?
கட்டிலில் இருவரும் குழந்தைகள் ஆனால் பிழையா பிழையா?"

காதலிகளுக்கே உரிய குணமது. தன்னவனிடம் தன்னை குழந்தையாக பாவிப்பது. குழந்தையாகி செல்லம் பொழிவதோடு குழந்தையின் "பிடிவாதத்தையும்" குமரியின் விழிப்போடு பற்றிக்கொள்ளுவாள்.

என்னை கொலை செய்யிறியேடி ராட்சசி! துண்டு துண்டாக அறுத்து போடுறாயேடி கள்ளி! என்று இவன் குழைய, நானே ஒரு குழந்தை, எனக்கு எப்படி கொலை செய்ய தெரியும்? என்று வினவுகிறாள் அவள்.



"எனக்கு அப்படி எல்லாம் செய்யத் தெரியாது, போடா!"

என்று காதல் பொழிகிறாள். அவளுக்கே தெரியும், காதலன் பேச்சு அப்படியே சத்தியம் என்றும். அவனை கொல்லும் கொலைகாரி தானேயென்றும்!! கொடுக்கி! அவனை வதைத்து ரசிப்பதில் அவளுக்கு சுகம். அவனுக்கு வலி!

wedding bells photography

அறுகம்புல் எப்படி அறுக்கும்? அயிரை மீனை தானே கொக்கு முழுங்கும்! நீ எப்படி இப்படி முரணாக குற்றம் சொல்கிறாய்? என "செல்லாது செல்லாது" என்று பொய்க் கோபத்துடன் தான் நிரபராதி என்பதாக வாதம் செய்கிறாள்.

//சூரியன ரெண்டு துண்டு செஞ்சு
கண்ணில் கொண்டவளோ
சந்திரன கள்ளுக்குள்ள ஊர வெச்ச
பெண்ணிவளோ
ராத்திரிய தட்டித்தட்டி கெட்டி செஞ்சி
மையிடவோ
மின்மினிய கன்னத்துல ஒட்ட
வெச்சுக்
கைதட்டவோ//

அவளின் ராட்சசி அவதாரத்தில் தோற்று, கொஞ்சம் காமத்தை கலந்து ரசனை அம்புகளை எய்கிறான்.

சந்திரனே குளிர்ச்சியானது. அதை இன்னும் குளிர்ச்சியான கள்ளினுள் ஊற வைத்தால், குளிர்ச்சியிலேயே கூதல் அடிக்கும். அந்த கூதலில் நரம்புகளில் மின்சாரம் பாயும். அதே மின்பாய்ச்சலை காதலியிடமிருந்து உணர்கிறான் காதலன்.



//வெளிய பூத்து நீ உள்ள காய்க்கிற
கடலக்காடு நீ ஆமா//

கடலைத் தாவரங்களில் வெளியில் பூ பூத்து மண்ணுக்குள் கடலை விளைவது போல, வெளியில்



ராட்சசத்தனம் செய்தாலும், அவள் அறியாமல் அவளினுள்ளே பெருங்காதல் பெருக்கெடுக்கும். அதை அவள் வெளிப்படுத்தாமல் காதலனை கொல்வதனால் தான் அவள் ராட்சசி.

"கொடியோடும் சக்கரவள்ளி
தெரியாம கிழங்கு வைக்கும்
அது போல பொம்பள சாதி
அறியாம மனசு வைக்கும்"

எனை ஆளும் ராட்சசா! உயிரை நனைத்த ரட்சகா! என்னை துருவித் துளைத்து உன் நினைவுகளை நிரப்பி, தூக்கத்தையே சொப்பனமாக்கி விட்டாயே! இப்படி அவள் காதலில் தவித்தாலும் அவனிடம் தன்னை ஒப்புக்கொடுக்க முரண்டு பிடிப்பாள்.

//துருவி என்னத் தொலச்சிபுட்ட
தூக்கம் இப்ப தூரமய்யா

தலைக்கு வெச்சி நான் படுக்க
அழுக்கு வேட்டி தாருமய்யா
தூங்கும் தூக்கம் கனவா//

உனையே நினைத்து நெளியும் சிறு புழுவானாளே மாது! கொஞ்சமாகவேனும் தூங்க வேண்டுமே! உன்னை நினைத்து நினைத்து உருக, அதற்காகவே உயிர் வளர்க்க தூக்கம் வேண்டுமே! நீயோ பக்கத்தில் இல்லை. உனது அழுக்கு வேட்டியையாவது தா! அதை தலையணையாக்கி நான் குட்டித்தூக்கம் போட!

அதென்ன அழுக்கு வேட்டி? காதலனை காலினிடையே உரசும் பூனையாய் சுத்தவிட்டு அவனை வதைத்து, அதை தூர நின்றே ரசித்த ராட்சசிக்கு காதல் பெருகி விட்டால்,

“சிந்தும் வேர்வை, தீர்த்தம் ஆகும்
சின்ன பார்வை மோட்ஷம் ஆகும்”

காதலனின் வியர்வை வாசம் அர்த்தரை தாண்டியது என்பாள். அழுக்கு வேட்டிக்குள் ஆண்மையின் சுவாசம் மேய்கிறது என்பாள். வியர்வை துளிகளின் ருசி கள்ளுண்டாலும் கிட்டாத போதை



என்பாள். ராட்சசிகள் ராட்டினம் காணும் இடம் அது.

//தேன் கூட்டப் பிச்சி பிச்சி
எச்சி வெக்க லட்சியமா//

தேன்கூடு போலவே வரிவரியாக கட்டம் கட்டமாக அழகாக இருக்கும் காதலி உதடு. அவள் எச்சிலே அது சுரக்கும் தேன். இவனுக்கோ அந்த தேன்கூட்டை ருசித்து பார்த்துவிட ஆசை!

“உன் பன்னீர் எச்சில் ருசியை
அறியாமல் போவேனோ”

எச்சில்! ஈயாஆஆஆ! அதற்கு பன்னீர் சுவையா?

“காதல் ஒன்றும் சுத்தம் கித்தம்
பார்ப்பதில்லையே
எச்சில் கூட புனிதம் ஆகுமே”

அவன் ஆசையை புரிந்து கொண்டவள், “லட்சியமா” என்று சேர்கிறாள். அதிலே “உன்னுடைய இலட்சியத்தை எப்போதடா அடைவாய்?” என்ற அவளின் விரகதாபம் சேர்கிறது. அவனின் முத்தத்துக்கு சம்மதத்தை சொல்லாமல் சொல்கிறாள்.

//பொண்ணு சொன்னா தலகீழா
ஒக்கிப்போட முடியுமா?
நான் நடக்கும் நிழலுக்குள்ள
நீ வசிக்க சம்மதமா?//

தான் சொன்னால் என்னவும் செய்ய தயாராகவே



காதலன் இருக்கிறானென்று தெரிந்தும்,சர்வாதிகார ஆட்சி செல்லச்சீண்டல் அன்பு அதட்டல்

கட்டளையை பிறப்பித்துவிட்டு, "சம்மதமா?" என்பதை கூட சேர்த்து சர்வதிகாரத்திலும் தன்னை ஜனநாயகவாதி என்று நிறுவ முனைகிறாள்.

"என்னை வதைக்கும் ராட்சசி நீ" என்ற காதலனின் குற்றச்சாட்டிலிருந்து தப்பிப்பதற்கான உத்தி. அதிலும் கண்ணாகவே இருக்கிறாள் சூனியக்காரி.

//நீராக நானிருந்தால் - உன்
நெத்தியில நானிறங்கி
கூரான உன் நெஞ்சில் - குதிச்சி
அங்க குடியிருப்பேன்
ஆணா வீணா போனேனே//

நீர் காணும் சொர்க்கம் கூட ஆணாக பிறந்த எனக்கு இல்லையே! நீர் செய்த மாதவத்தில் ஒரு துளி, அதனிலும் சிறிய துமியாக கூட இந்த மானிடனுக்கு வரம் இல்லையே! ஆணாக பிறந்ததே வீண்!!

"மழையின் துளிகள் அவளை நனைத்து
மார்பு கடந்து இறங்கும் பொழுது
முக்தி அடைந்து முத்துக்கள் ஆகின்றதே"

பொறாமை, ஆற்றாமை, சோகம், தவிப்பு, தத்தளிப்பு, கோபம், பிரிவு, கெஞ்சல், கொஞ்சல், அதிகாரம், ஆசை, மகிழ்ச்சி என்ற அத்தனை உணர்ச்சித் தந்திகள் மேல் ஏறி நின்றும் கிட்டார் மீட்டி மகிழ்பவள் அவள். அதன் பரிவதிர்வின் வலியால் பரிதவிப்பவன் இவன். ஆனால் ராட்சசி யட்சியாகி காதல் மடையை திறந்து விடும் போது, காதல் சாராய வெள்ளத்தில் மூழ்கும் போதைக்கு இவன் அடிமையாகிவிட்டான். அதனால் அவள் கொடுக்கும் வலி உயிரை பிழிந்தாலும்,

//உயிர உரிச்சு நீ கயிறு திரிக்கிற சுகம் சுகமா//



**காதல் பவித்திரமானது!**

3

# முதலாளித்துவம்

CAPTALISM

அ.திருமருகன்
மாணவன்
இலங்கை சட்டக்கல்லூரி

## தொழில்துறை முதலாளித்துவம்

18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், டேவிட் ஹியூம் (David hume) மற்றும் ஆடம் ஸ்மித் (Adam Smith) தலைமையிலான பொருளாதார கோட்பாட்டாளர்களின் ஒரு புதிய குழுவானது பொருளாதார கோட்பாடுகளை ஆராய்ச்சி செய்தது.

இதன் விளைவாக 1776 ல் வெளிவந்த ஆடம் ஸ்மித்தின் "நாடுகளின் செல்வம்" (The Wealth of Nations) எனும் நூலில் அனைத்து பொருளியல் கருத்தாக்கங்களையும் ஒருங்கிணைத்து பொருளியல் என முறைபடுத்தப்பட்ட அறிவியல் துறையாக புத்தாக்கம் பெற்றது.

இங்கு உலகின் செல்வம் நிலையானதாக இருப்பதற்கும், ஒரு அரசு அதன் செல்வத்தை அதிகரிக்கவும் முடியும் என்ற நம்பிக்கையைப் போன்ற மேலும் ஒரு மாநிலமானது மற்றொரு நாட்டின் செலவில் அதன் செல்வத்தை அதிகரிக்க முடியும் எனும் எண்ணக்கரு எடுத்து நோக்கப்பட்டது.

மேலும் தொழில்துறை புரட்சியின் போது, தொழிலதிபர்கள் வர்த்தகர்களை முதலாளித்துவ முறையின் ஒரு மேலாதிக்கக் காரணியாக மாற்றினர் மற்றும் கலைஞர்களின், செய்பவர்கள், மற்றும் பயணிப்போர் பாரம்பரிய கைவினைத் திறன்களின் வீழ்ச்சிக்கு வித்திட்டனர்.

இந்த காலகட்டத்தில், வர்த்தக விவசாயத்தின் வளர்ச்சியால் உருவாக்கப்பட்ட உபரி விவசாயத்தை இயந்திரமயமாக்கல் அதிகப்படுத்தியது.

**தொழிற்துறை முதலாளித்துவம், உற்பத்தி செயல்முறைக்குள்ளாகவும் மற்றும் பணிகளுக்கு இடையேயான சிக்கலான தொழிலாளர் பிரிவினை வகைப்படுத்தப்படும் உற்பத்தித் தொழிற்சாலை அமைப்பின் வளர்ச்சியைக் குறிக்கிறது.இறுதியில் முதலாளித்துவ உற்பத்தி முறையின் பூகோள மேலாதிக்கத்தை நிறுவியது.**

## நவீன முதலாளித்துவம்

உலகமயமாதலின் பரந்த செயல்முறைகளால் உலகெங்கிலும் முதலாளித்துவம் வழிநடத்தப்பட்டது.



18 ஆம் நூற்றாண்டின் இறுதியில், பொருளாதார மற்றும் பிற பூகோளமயமாக்கலின் தீவிரமடைந்து வரும் செயல்முறைகளை பரந்த முறையில் பொருளாதாரம் மற்றும் பிற உலகமயமாக்கல் இருக்கிறது.

பின்னர், 20 ஆம் நூற்றாண்டில், மத்திய-திட்டமிட்ட பொருளாதாரங்கள் ஒரு முரண்பாட்டை முதலாளித்துவம் முறியடித்து இப்போது உலகளாவிய சூழ்நிலையை கொண்டுள்ளது. கலப்பு பொருளாதாரம் தொழில்மயமான மேற்கத்திய உலகில் அதன் மேலாதிக்க வடிவமாக இருப்பதை காணலாம்.

தொழில்மயமாக்கல் வீட்டுப் பொருட்களின் மலிவான உற்பத்தியை பொருளாதாரம் அளவைப் பயன்படுத்தி அனுமதித்தது, அதே சமயம் விரைவான மக்கள்தொகை வளர்ச்சி பொருட்களின் தேவையை அதிகரித்தது.இந்த காலத்தில் உலகமயமாக்கல் 18 ஆம் நூற்றாண்டு ஏகாதிபத்தியத்தின் விளைவாக தீர்மானகரமாக வடிவமைக்கப்பட்டது.

**"உலகப் பொருளாதாரம் எந்தக் கொள்கைகள், சட்டதிட்டங்களின் அடிப்படையில் அமைக்கப் பட்டிருக்கிறதோ, அவை**



**குறைபாடுடையவை என இருக்கவேண்டும் பட்சத்தில் விரைவிலேயே அவை சரிசெய்யப்படவில்லை என்றால், உலகப் பொருளாதார வீழ்ச்சிக்கு அவையே காரணமாகி விடும்" என்றார் பொருளியல் நிபுணர் மாரிஸ் அலைஸ்.**



**ஆனால் இன்றைய உலகப் பொருளாதாரத்தின் பெரும்பகுதி முதலாளித்துவக் கொள்கைகளின் அடிப்படையிலேயே அமைந்திருக்கிறது. மாற்றுக் கொள்கையான பொதுவுடைமைக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தியிருக்கும் நாடுகளில்கூட முதலாளித்துவத்தின் தாக்கம் மிகுந்தே காணப்படுகிறது. கம்யூனிஸ சீனா இன்று முதலாளித்துவ எஜமானர்களின் அபிமானத்திற்குரிய பிரதேசமாகவே ஆகிவிட்டது.**

இந்த பத்தி தினமணியில் வெளிவந்த முதலாளித்துவம் எனும் கட்டுரையினை தழுவி மாற்றங்களுடன் இலங்கைக்கு ஏற்ற வகையில் எழுதப்பட்டுள்ளது.

*சாரல் தாறும்......!!!*




# புதிர் 11
# கட்டங்களை தீர்ப்பவனுக்கே கல்யாணம்

சினமிகா

வேதாளத்தை தன் முதுகில் சுமந்து கொண்டு அடர்ந்த காட்டின் வழியே நடந்து வந்து கொண்டிருந்த விக்ரமாதித்தனிடம், அந்த வேதாளம் தான் கூறும் கதையின் இறுதியில் அக்கதைக்கான சரியான பதிலை சொல்லுமாறு கூறி, கதை சொல்ல ஆரம்பித்தது.

ஒரு சமயம் "கிஷநகர்" என்ற நாட்டை "ராஜேந்திரா" என்ற மன்னன் ஆண்டு வந்தான். வீரத்திலும், கொடை பண்புகளிலும் சிறந்தவனான அம்மன்னனின் ஆட்சியில் மக்கள் அனைவரும் இன்பமாக வாழ்ந்தனர். அம்மன்னனுக்கும், அவனது மனைவிக்கும் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு "சோனா" என்று பெயரிட்டு வளர்த்தனர். தனக்கு ஆண் வாரிசு இல்லாததால் தன் மகள் சோனாவிற்கு ஆண்கள் பயிலும் போர்க்கலையை நன்கு பயிற்றுவித்து, அவளை சிறந்த வீரமங்கையாக்கினான் மன்னன். சோனாவும் பல போட்டிகளில் கலந்து கொண்டு, அதில் தன்னுடன் போட்டியிட்ட பல ஆண் வீரர்களையே தோற்கடித்து புகழ் பெற்ற இளவரசியாக விளங்கினாள். சோனாவிற்கு திருமண வயது நெருங்கியதும் அவளுக்கு திருமணம் செய்விக்க ஏற்ற இளவரசனை தேடிக்கொண்டிருந்தார் ராஜேந்திரா. இதையறிந்த சோனா, "தான் திருமணம் செய்து கொள்ளவிருக்கும் இளவரசன் அறிவாற்றலில் சிறந்தவனாக இருந்தால் மட்டுமே, தான் அந்த இளவரசனை திருமணம் செய்து கொள்வேன். நாட்டை நல்லாட்சி புரிய வீரம், அறிவு இரண்டும் அவசியம்."



என்று நிபந்தனை விதித்தாள். இதைக் கேட்ட ராஜேந்திரா, தன் மந்திரிகளுடன் ஆலோசித்து சோனா கூறியபடி அறிஞர்கள் சூழ போட்டிகளை ஏற்பாடு செய்து, அதில் அனைத்து நாட்டு இளவரசர்களும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார்.

இந்த போட்டிகளில் கலந்து கொள்ள எல்லா நாட்டு இளவரசர்களும் வந்திருந்தனர். அழைக்கப்பட்ட அறிஞர்கள் பல நுட்பமான வினாக்களை வினவி இளவரசனை தேர்ந்தெடுக்கும் போட்டி நடைபெற்று கொண்டிருந்தது இறுதியாக மீதமாக இருந்த இருவருக்கும் ஒரு புதிர் போடப்பட்டது.

1, 2, 3, மற்றும் 4 இலக்கங்களின் நான்கு தொகுதிகளை பதினாறு பெட்டிகளில் வைக்க வேண்டும், இதனால் ஒரே எண் எந்த கிடைமட்ட அல்லது செங்குத்து வரிசையிலும் தோன்ற கூடாது. இது மூலைவிட்டங்களுக்கும் பொருந்தும்.

| | | | |
|---|---|---|---|
| | 1 | | |
| | | | 2 |
| | | 3 | |
| 4 | | | |


கட்டத்தில் இறுதி பன்னிரண்டு எண்களை வைத்து சிக்கலை தீர்க்க வேண்டும். முதலில் இச் சிக்கலைத் தீர்ப்பவரே இளவரசனாக தேர்ந்தெடுக்கப்படுவார் என்று கதை கூறி முடித்தது வேதாளம்.

தூமி அன்பர்களே! வழமை போல் நீங்களும் விக்ரமாதித்தனுக்கு உதவிடுங்கள்.

**புதிர் 10 - விடைகள்**

## ஐயய்யோ! அவ்வளவு பணம் வேண்டாம்!

தோமஸ் அல்வா எடிசன் பல கண்டுபிடிப்புகளைச் செய்தவர். ஒரு கண்டுபிடிப்பின் உரிமையைப் பெற வெஸ்டர்ன் யூனியன் கம்பெனி, அவருக்கு ஒரு லட்சம் டாலர் முன் தொகை கொடுக்க முன்வந்தது.



ஐயய்யோ! அவ்வளவு பணம் வேண்டாம்! உங்களிடமே அந்தத்தொகை இருக்கட்டும். பாதுகாப்பாகவாவது இருக்கும் என்று சொன்னார். அவர்கள் மிகவும் வலியுறுத்தவே, சரி, வருடத்துக்கு ஆறாயிரம் டாலர் வீதம் 17 ஆண்டுகளுக்குத் தாருங்கள் என்றார்.

# சூழல் தரமிழத்தலில் செல்வாக்கு செலுத்தும் சமூகக் காரணிகள் 1

அதிரன்

சூழலின் வளங்கள் எனக் குறிப்பிடப்படும் நீர், காற்று, நிலம், தாவரம் போன்றவற்றின் இயல்பு நிலையில் ஏற்படுத்தப்படுகின்ற சிதைவு சூழல் தரமிழத்தல் எனப்படுகின்றது. உலகில் மனிதன் தோன்றிய காலத்தில் இருந்து எப்போது மனிதன் சூழலை மாற்றியமைக்க விரும்பினானோ அன்றிலிருந்தே சூழலின் பல்வேறு மாற்றங்களுக்கு முகங்கொடுக்கத் தொடங்கியது. அந்தவகையில் சூழல் தரமிழத்தலில் முக்கியமாக பின்வரும் விடயங்கள் பாதிப்பதன் மூலம் சூழல் தரமிழத்தல் ஏற்படுகின்றது.

வளிமாசடைதல், ஓசோன்படை தேய்வடைதல், காலநிலை மாற்றம், திண்மக்கழிவுப் பிரச்சினைகள், நீர்மாசடைதல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் சூழல் தரமிழப்பதை வெளிப்படுத்தி நிற்கின்றன. சூழல் தரமிழத்தலில் செல்வாக்குச் செலுத்துகின்ற சமூக பொருளாதாரக் காரணிகளாக சனத்தொகை அதிகரிப்பு, நகராக்கம, வறுமை, சமயச்சடங்குகள், விழாக்கள், நவீன வாழ்க்கை முறை, விழாக்கள், கண்காட்சிகள் போன்ற காரணங்களைக் குறிப்பிடலாம்.



சூழல் தரமிழப்பில் செல்வாக்குச் செலுத்துவதில் சனத்தொகைக்கும் பாரிய பங்களிப்பு உள்ளது. சனத்தொகை என்பது உண்மையிலே அபிவிருத்தி மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியமானதொரு வளமாக இருக்கின்ற அதேவேளை, மற்றொரு பக்கத்தில் குறிப்பிட்ட அளவை விட அதிகரிக்கின்றபோது, அது சூழல் தரமிழப்பில் செல்வாக்குச் செலுத்துகின்ற மிகப்பெரும் மூலமாகவும் காணப்படுகின்றது. சூழலின் வளங்கள் வரையறைக் குட்பட்டவையாகக் காணப்படுகின்றன. ஆனால் சனத்தொகை அபரிதமான வளாச்சியை அடைகின்றபோது குறிப்பிட்ட சூழல் தொகுதியினால் தாங்கமுடியாத நிலை ஏற்படுகின்றது. தாங்க முடியாத நிலை ஏற்படும் சந்தர்ப்பத்தில் சூழல் தரமிழத்தலிற்கு உள்ளாக்கப்படுகின்றது.

சனத்தொகை அதிகரிப்பானது இயற்கை வளங்களின் பாவனை, அடிப்படைத் தேவை உற்பத்தி ஆகியவற்றினால் உயிரினப்

பலவகைமை இழப்பு, காற்று மற்றும் நீர் தரமிழத்தல் மற்றும் வரட்சியான நிலங்களின் மீதான அழுத்தம் போன்ற பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றது.

சூழல் சமநிலையானது சனத்தொகை வளர்ச்சி அல்லது அதிகரிப்புடன் தொடர்புபட்டுள்ளது. ஏனெனில் சனத்தொகை வளர்ச்சியானது பல்வேறு தேவைகளை வேண்டி நிற்கின்றது. சனத்தொகை வளர்ச்சியானது முக்கியமானதொரு விடயமாக இருக்கின்றது. குறிப்பாக ஒரு பிரதேசத்திலுள்ள வளங்களின் உற்பத்தி, பரம்பல், மற்றும் பயன்பெறுதல் ஆகியவற்றுடன் தங்கியுள்ளது.

ஒரு பிரதேசத்தில் காணப்படும் சராசரியான சனத்தொகையினால் அதிகளவில் சூழல் தரமிழப்பதில்லை. மாறாக அதிகரித்த சனத்தொகை காணப்படுகின்றபோது அங்குள்ள ஒவ்வொரு நபருக்கும் வசிப்பதற்கான இடம், உணவுத் தேவை, வைத்தியசாலை, கல்வியகங்கள் என்பவற்றை வேண்டி நிற்கின்றது. இத்தகைய நிலைமைகள் சூழலிலேயே தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

நவீனவாழ்க்கை முறை காரணமாகவும் சூழல் தரமிழத்தலுக்கு உள்ளாகின்றது. பல இளைஞர்கள் இன்று நவீனத்துவமான வாழ்க்கை முறையினையே பெரிதும் விரும்புகின்றனர். பாதியளவிலான ஒலிபெருக்கி சாதனங்களைப்



பயன்படுத்தல், பொருத்தமான நவீன ஆடைகள், வேகமான தனிநபர் வாகனங்கள் போன்றவற்றின் பாவனையினை விரும்புகின்ற போக்கு காணப்படுகின்றது. அத்துடன் இன்று தமது வீடுகளில் சமைத்து சாப்பிடுவதை விடுத்து துரித உணவிற்காக உணவு விடுதிகளை நாடுகின்ற நிலைமையும் காணப்படுகின்றது. இதனால் உணவகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது.

உணவகங்களை அதிகளவில் அமைப்பதற்காக இயற்கையான இடங்கள் மாற்றியமைக்கப்படுவதுடன், அதிகளவில் மரங்கள் அழிக்கப்படுவதுடன், இயற்கை வளங்களும் அழிக்கப்படுகின்றன. அத்துடன் உணவகங்கள் மூலம் வெளியேற்றப்படும் கழிவுகள் நீர் மாசடைவதில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

அறிவோம்...

ஜீவா ஷஜீவனின்

# சிங்ககிரித்தலைவன்

ஆட்சி 30

## சாத்தானின் வாய்!

ஆண்டாண்டு காலமாய் அமைதியாய் கிடந்த சிங்ககிரியின் நீண்ட உறக்கம் காசியப்பனால் மீண்டும் கலைந்து போனது! அரச படை பட்டாளங்கள், பணியாளர்கள் என்று சிங்ககிரியின் சூழலே ஒரே ஆரவாரமாக இருந்தது! பாதையைச் செப்பனிடுபவர்களும், காட்டை வெட்டி கட்டுமானங்களுக்கு உதவுபவர்களும், முதல் நாள் நடந்த சம்பவத்தால் சற்றுப்பயந்து போய்தான் இருந்தார்கள்... ஆனால் அதற்குப்பிறகு அப்படியொரு சம்ப வம் நடைபெறாததாலும், தங்கள் தளபதியாரே அது குறித்து ஆராய நேரில் சென்றதாலும், ஓரளவு அச்சம் குறைந்து நம்பிக்கை பெற்றிருந்தாலும், அது சாத்தானின் குன்று என்றும், சாத்தானின் வாயில் கால் வைத்ததாலேயே இரு வீரர்களும் சாத்தானின் வாயில் விழுந்தார்கள் என்றும் சில ஊகங்கள் பூதங்களாக உலாவின!

எது எப்படி இருந்தாலும் காசியப்பனோ தன் முயற்சியில் கடுகளவும் பின்வாங்கவில்லை... மீகாரனின்



வரவுக்காய் காத்திருந்தான்! மேலும் அவன் சாத்தானைப் பற்றியோ... அமானுஷ்யங்களைப் பற்றியோ நம்பிக்கையற்றவனாகவே இருந்தான்! வாழும் பொருட்டு எதுவும் செய்யலாம் என்றும், கலையின்பமாகிய நிலையின்பத்தை வேறு யாரும் அனுபவிக்காத நிலையில் நின்று அனுபவிக்க வேண்டும் என்பதையும் குறிக்கோளாகக் கொண்டிருந்தான்!

இலங்கையின் அரியாசனம் கிடைத்ததும் அதைத் தன் கற்பனையில் ஏற்கனவே உருவாக்கி வைத்திருந்த சிங்ககிரியை நோக்கி எடுத்துவந்ததில் இருந்தே அவனின் இரசிப்பின் ஆழத்தை நாம் உணர்ந்து கொள்ளலாம்!

வழமையான சகதிக்குள் புதுமைத் தாமரையாக மலர வேண்டும் என்பதே அவனின் தீவிர எண்ணம்!

அதற்கு அதிகாரமும், ஆள்பலமும் துணை செய்ய வேண்டும்! ஆனால் இரு வீரர்களின் மரணமும் மற்றைய வீரர்களின் மனநிலையைப் பாதிப் படைய செய்திருந்தது தான் இப்போதைக்கு பெரும் தலையிடியாய் அமைந்தது! குன்றில் ஏறும் பணியில் ஈடுபட்டிருந்த வீரர்களும் மனதளவில் சோர்ந்தே போயிருந்தனர்...

மாலை மெல்ல கவிந்து கொண்டிருந்தது! காசியப்பன் கூடாரத் தினுள் செல்வதும்... வெளியே வந்து பார்ப்பதுமாக மீகாரனின் வரவை எதிர்பார்த்திருந்தான்! மீகாரன் சென்றதும், அவனின் பின்னால் காசியப்பனால் அனுப்பப்பட்ட வீரர்களில் ஒருவன் தன் குதிரையில் வந்து சேர்ந்தான்!

"மன்னா... தளபதியார் ஏதோ அகழ்வுப் பணியில் ஈடுபட்டுள்ளார்! வீரர்கள் புதையுண்ட இடத்தில் இருந்து நாம் அமைத்து வந்த பாதை வரை பணியாளர்களை வைத்து பள்ளம் தோண்டியுள்ளார்..."

"அப்படியா?" என்று காசியப்பன் கேட்டு முடிப்பதற்குள் மீகாரன் அனுப்பிய வீரன் ஒருவன் ஓலையுடன் அவ்விடம் வந்து சேர்ந்து முதுகு மடக்கி பணிந்து ஓலையை காசியப்பனிடம் வழங்கினான்!

ஆவலாக ஓலையை திறந்தான் காசியப்பன்...

"மன்னா...
திறந்தது சாத்தானின் வாய் அல்ல!
நம் முன்னோர்களின் மதிநுட்பம்!
காலையில், எனக்கு இரண்டு யானைகளை இங்கு அனுப்பினால், விரைந்து என் பணி முடியும்!வீரர்களின் அச்சமும் மறையும்"

இப்படிப் புதிர் போல ஓலை இருந்தாலும், ஆபத்து ஏதும் இல்லை என்பதை அது உணர்த்தியதால், காசியப்பன் உள்ளார மகிழ்ந்து வீரர்களை அனுப்பி வைத்து விட்டு கூடாரத்தின் வாசலுக்கு வந்த போது, லீலாதேவியும் வெளியே வந்தாள்!

காசியப்பனின் முகத்தில் தெரிந்த மகிழ்வின் சாயலால் லீலாதேவியின் முகமும் மலர்ந்தது...

"லீலா... நன்றாக ஓய்வெடுத்தாயா? உன் முகத்தில் அசதியின் ரேகையே இல்லையே... இந்தப் பயணம் உன்னைக் களைப்படையச் செய்யவில்லையா?"

"என் உயிரின் மேலான தங்களின் அரவணைப்பில்... என்னையே மறந்து யானையில் வந்தேன்... இந்த சிங்ககிரி இவ்வளவு அருகிலேயா இருக்க வேண்டும்..? ஏழு கடல்களையும்... ஏழு மலைகளையும் தாண்டியிருக்க கூடாதா? என்றல்லவா நான் கவலை கொண்டேன்..!
எப்படி அசதி கொள்வேன்? வரம் பெற்ற யாரேனும் அசதி கொள்ளவார்களா என்ன?"

காசியப்பன் அசந்து போனான்! தான் முதலில் சந்தித்த போது எப்படி லீலாதேவியின் பேச்சின் வீச்சு எப்படியிருந்ததோ அதை மீண்டும் கண்டதால் காசியப்பன் இன்னும் இன்னும் மகிழ்ந்தே போனான்!

"சாத்தானின் வாய் திறந்ததாகப் பேசிக்கொள்கிறார்களே...
கேள்விப்பட்டாயா லீலா?"

"கேள்வியுற்றேன் நாதா...
இரண்டு வீரர்கள் மடிந்ததையும்

அறிந்தேன். அந்த இரண்டு வீரர்களின் குடும்பங்களுக்கும் நீங்கள் இழப்பீடு வழங்கியதாகவும் அறிந்தேன்...”


”லீலா... இந்த நாட்டை என்னருகில் இருந்து ஆளப்போகின்றவள் நீ... நான் எடுத்திருக்கும் இந்த முயற்சி பயனற்றதா?சாத்தானின் வாய் குறித்து நீ அச்சம் கொள்ளவில்லையா?”

“நாட்டை ஆளும் திறமை எனக்கு இல்லை ஆயினும் உங்கள் அன்பை நான் மட்டுமே ஆள ஏங்கித்தவிக்கின்றேன்... உங்கள் முயற்சி பயனற்றது என்று யார் சொன்னாலும் அவர்களின் நாவை அறுத்து வீசுங்கள்! சாத்தானின் வாய் திறந்தால் உங்கள் வாளால் அதை மூடிவிடுங்கள்! நீங்கள் அருகிலிருக்க எனக்கு அச்சம் தான் ஏது? ”

காசியப்பனுக்கு ஏற்ற துணையாக லீலாதேவி வரலாறு எங்கும் பேசப்படுவாள் என்பதற்கு இதை விட வேறு சான்று தேவையா என்ன?

காதல் நீளும் ...

## காந்தியும் சார்லி சாப்ளினும் சந்தித்த போது...



இரண்டாவது வட்டமேஜை மாநாட்டுக்காக காந்தி லண்டன் சென்ற பொழுது, சாப்ளின் உடனான இந்தச் சந்திப்பு நிகழ்ந்திருக்க வேண்டும். ஹமை ஆட்டோ பயோகிரா.ஃ.பி என்ற பெயரில் தன் சுயசரிதையை எழுதிய சாப்ளின், இந்தச் சந்திப்பைப் பற்றி விரிவாக அந்தப் புத்தகத்தில் பதிவு செய்துள்ளார்.

லண்டனில் உள்ள ஒரு சிறிய வீட்டில் 22 செப். 1931 அன்று அந்த சந்திப்பு நிகழ்ந்ததாக கூறும் சாப்ளின், அந்த சிறிய அறை முழுவதும் பத்திரிகையாளர்களும் புகைப்படக்காரர்களும் அவர்களை சூழ்ந்ததாக நினைவுகூர்கிறார். மனிதர்களின் இடத்தில் இயந்திரத்தை உபயோகப்படுத்தும் வழக்கத்தை குறித்து அவர்கள் இருவரும் விவாதித்ததாகச் சொல்கிறார். காந்தி என்ற மாமனிதர் லண்டனில் இருப்பதாக அறிந்த சாப்ளின், அவரைச் சந்திப்பதற்காக தூது அனுப்பியுள்ளார். காந்தி திரைப்படங்களின் காதலன் அல்லர். தன் வாழ்நாளிலேயே காந்தி ஒரு இந்திப் படமும் ஒரு ஆங்கில படமும் மட்டுமே பார்த்துள்ளார். அவருக்கு சார்லி சாப்ளின் பற்றியோ அவருடைய படைப்புகள் பற்றியோ ஒன்றுமே தெரியாது. ஆனாலும் இந்தச் சந்திப்பு உலகப் பிரபலம் ஆனது. மிகக் குறுகிய நேர சந்திப்பாக இருந்தாலும், இந்தச் சந்திப்பு குறித்து சாப்ளின் தன்னுடைய சுயசரிதையில் மிகவும் நெகிழ்ந்துள்ளார். காந்தியின் அரசியல் கண்ணோட்டத்தையும் நிலைப்பாடுகளையும் வியந்து போற்றியுள்ளார். காந்தியோடு ஒரு சிறு இறைவழிபாட்டையும் அன்று மேற்கொண்டுள்ளார்.

# ஈழச் சூழலியல் 19

த.விதுர்ஷன்
மாணவன்
கொழும்பு பல்கலைகழகம்

## நீர் மாசடைதல் – 01

நாம் முன்னைய தொடர்களில் ஆராய்ந்ததைப்போன்று மண்ணியல் சார் முக்கியத்துவங்களும், மண்ணியல் சார்ந்து விவசாய இடர்பாடுகளும் சவால்களும் ஈழச்சூழலியலோடு தொடர்புற்ற விதங்களை ஆராய்ந்தோம்.

நிச்சயமாக இடர்பாடுகள் சவால்கள் என்பவற்றை தாண்டி சாதகமான அனுகூலமிக்க வாய்ப்புக்களும் இல்லாமல் இல்லை. அத்தகைய வாய்ப்புகளை சூழல்நேயத்தோடு அணுகுவதில்தான் நிலைபேறான சமூகமாக எமது வெற்றியும் சார்ந்திருக்கின்றது. கடந்த ஒன்றரை வருடகாலத்திற்கும் அதிகளவான பகுதியை ஆக்கிரமித்து நிற்கும் கொரோணா பெருந்தொற்று இயற்கையின் பெரும் சீற்றம் எனக்கூறப்பபடுகிறது. கடந்த நூற்றாண்டின் மிக வெப்பநிலை அதிகரித்த ஆண்டாக 2019 பதியப்பட்டிருந்ததிலிருந்து, கடந்த சில தினங்களுக்கு முன்னர் சீனாவின் ஆண்டு மழைவீழ்ச்சி ஒரு தினத்தில் பதிவாகியமை, யாழ் குடாநாட்டிலிருந்து ஏறத்தாள 600Km தூரத்தில் பதிவான நிலநடுக்கம் என பல வகையான விதத்தில் இயற்கை அன்னை எம்மை சபித்துக்கொண்டிருக்கிறாள்.

யாழின் சில வரட்சிக்கிராமங்களில் மயிர்கொட்டிகளின் பெருக்கம் கிராமங்களையே இடம்பெயரசெய்யும் அபாயம் காணப்படுவதாக சொல்லப்படுகின்றது. இத்தகைய இயற்கையின் அசாதரணப்போக்கை நாம் தடுக்க வேண்டுமானால் இயற்கையை நேசிக்கவும் ஆராதிக்கவும் ஆரம்பித்தே ஆக வேண்டியது காலக்கட்டாயமாகும்.

அந்த வகையிலே ஈழச்சூழலியல் எனும் பெரும் ஆய்பரப்பில் மண்ணியலின் தொடர்ச்சியாக நாம் ஆராய விளைகின்ற விடயம் நீர், வளி மாசாக்கம் ஆகும். நீரானது அதன் பௌதீக, இரசாயன உயிரியல் அம்சங்களில் மாற்றமடைகின்றபோது நீர் மாசடைதல் எனப்படுகின்றது. அதாவது ஏரிகள் ஆறுகள், கடல்கள், நிலத்தடி நீர் முதலிய நீர் நிலைகளில் காணப்படும் நீர் மனித நடவடிக்கைகளால் அதன் தூய்மையை இழந்து குறிப்பிட்ட சூழல்தொகுதியின் பயன்பாட்டிற்கு உதவாதமுறையில் மாற்றமடைகின்ற தன்மையினை நீர் மாசடைதல் எனக் குறிப்பிடலாம்.

இயற்கை நிகழ்வுகளான எரிமலை வெடிப்பு, அல்காப்பெருக்கம், புயல், நிலநடுக்கம், வரட்சி போன்றவற்றாலும் நீரின் தரத்திலும் அதன் சூழலியல் நிலைமையிலும் மாற்றங்களை உண்டு பண்ணுகின்றன. இருந்த

போதிலும் மிக அதிகளவில் மனித செயற்பாடுகளினால் அந்நீர் தூய்மை கெட்டு மனித பயன்பாட்டிற்கு உதவாமலும், உயிரினங்களின் வாழ்வுக்கு உதவாமலும் போகும் நிலை நீர் மாசடைதலினால் ஏற்படுகின்றது.

நீர் மாசடைதலை ஏற்படுத்தும் மாசுக்களின் மூலத்தைப் பொறுத்து இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

முதலாவது ஓரிட மூல மாசடைதல். அதாவது ஒற்றை இட மூலத்திலிருந்து மாசு நீரில் கலப்பதினால் உருவாகும் மாசடைதல்களை உள்ளடக்குகின்றது.

இரண்டாவது பரந்த மூல மாசடைதல். அதாவது இது ஒரு பரந்த இடப்பரப்பிலிருந்து சிறிது சிறிதாக சேகரிக்கப்படும் மாசுக்களால் உருவாகின்றது.

விவசாய நடவடிக்கைகளினால் பல்வேறு விதத்தில் நீர் மாசாக்கம் அடைகின்றது. விவசாய நிலங்களில் கிருமி நாசினிகள், பீடை நாசினிகள், மற்றும் இரசாயன உரங்கள் என்பவற்றின் பயன்பாடு அதிகமாகக் காணப்படுகின்றது. இவ்வாறு பயன் படுத்தப்பட்ட நிலத்தினூடாக நீரானது வெள்ள காலங்களில் பாய்ந்து செல்லும்போதோ அல்லது நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்கூடாக ஆறுகளில் இந்த நீர் கலக்கின்றபோது அத்தகைய மாசுக்களை கழுவிச் சேர்த்த வண்ணமே நகர்கின்றது. மேலும் இரசாயன கிருமிநாசினி, பீடை நாசினி என்பவற்றின் கொள்கலன்கள் அருகிலுள்ள நீர் நிலைகளில் விடப்படுகின்றபோதும் நீர் மாசடைவதற்கு வழிவகுக்கின்றது. வளர்முக நாடுகளைப் பொறுத்தவரை விவசாய நடவடிக்கைகளில் அதிகளவில் ஈடுபடுவதனால் இத்தகைய மாசாக்கம் இடம்பெறுகின்றது.



**கைத்தொழில் நடவடிக்கைகள்**

இன்று உலகின் அதிக வருமானத்தை ஈட்டிக்கொடுக்கின்ற தொழிலாகவும், அதிக தொழில் வாய்ப்பை உருவாக்கின்ற ஒரு துறையாகவும் கைத்தொழில்த்துறை காணப்படுகின்றது. கைத்தொழில் துறையில் பல்வேறு விதத்தில் வெளியேறும் கழிவுகள் நீர்நிலைகளில் சேர்க்கப்படுவதனால் நீர் நிலைகள் மாசடைகின்றது. குறிப்பாக இரசாயனப் பொருட்கள் தயாரித்தல், இலத்திரனியல் கழிவுகள், உணவு பதனிடல் கழிவுகள், மற்றும் தொழிற்சாலைகளில் உள்ள இயந்திரங்களைக் குளிர வைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டு பின்னர் நீர்நிலைகளில் விடப்படும் சூடானநீர் போன்றவற்றின் காரணமாக நீர்நிலைகள் மாசடைகின்றன.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | 4 | 5 | |
| | | | | 6 | | | 7 |
| 8 | | | 9 | | | | |
| | | 10 | | 11 | | | |
| 12 | | | 13 | | | | |
| | | 14 | | 15 | | 16 | |
| 17 | 18 | | | | 19 | | |
| 20 | | | | 21 | | | |




சரியான விடைகளை
அனுப்ப வேண்டிய முகவரி
www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

### இடமிருந்து வலம்

1. தலிபான்கள் ஆட்சியமைத்த நாடு
6. நிறம்
8. பயம்
9. பிரபஞ்ச தொகுதி (குழம்பி)
11. ஆரோக்கியமான பொறியல் (குழம்பி)
12. காற்றை கட்டுப்படுத்தும் வீட்டின் பகுதிகளில் ஒன்று
14. இறைவன் (திரும்பி)
16. ஒருவகை மரணம் (திரும்பி)
17. இலங்கையில் பாதயாத்திரை செல்லும் தலங்களில் ஒன்று
20. நபர் (திரும்பி)
21. மரம் (திரும்பி)

### மேலிருந்து கீழ்

1. இலங்கையை ஆக்கிரமித்த வர்கள்
2. துறவின் நிறம்
3. சங்கீத மொழி
4. ஒருவகை நடனம்
5. அர்ச்சுனனின் தேரோட்டி (தலைகீழ்)
7. எல்லோருக்கும் கூறுவதை இது அடிப்பது என்பர்
10. அரசர் (குழம்பி)
13. பொலீஸாரின் பிரதான பணி (தலைகீழ்)
15. தோல் நோய் ஒன்று
18. ஒரு வகை தாளம் (தலைகீழ்)
19. சம்மதம் (தலைகீழ்)

## குறுக்கெழுத்துப்போட்டி - 27 விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஒ | லி | ம் | 2 பி | க் | | 3 கா | 4 ல் |
| ட் | | | ப் | | 5 து | த் | வா |
| 6 ட | ம | ரு | க | 7 ம் | | த | |
| க் | | | | 8 ஆ | த | வ | ன் |
| 9 கூ | ந் | த | 10 ல் | | | ரா | |
| த் | | | 11 ப | த் | 12 தி | ய | 13 ம் |
| 14 த | டா | 15 க | ம் | | 16 மா | ன் | ய |
| ர் | | 17 டி | ஆ | | ச | | தா |



எஸ்.எஸ்.நுஜன்



## T-20 உலகக்கோப்பை 2021

# அணிகளின் அலசல்

இந்தியாவில் நடைபெற இருந்த ஐசிசி ஆண்கள் ரி20 உலக கிண்ணம் 2021 வருகிற ஒக்டோபர் மாதம் 17ம் திகதி ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஓமானில் ஆரம்பமாகிறது. இதன் இறுதிப் போட்டி, நவம்பர் மாதம் 14 திகதி டுபாயில் நடைபெறவுள்ளது. இந்த தொடருக்கான 15 வீரர்கள் கொண்ட அணியினை முதலாவதாக நியூசிலாந்து அறிவிக்க அதை தொடர்ந்து அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.




## நியூசிலாந்து

கடந்த இரு உலகக் கிண்ணங்களின் (2015,2019) போது இறுதி வரை முன்னேறிய அணி, கடந்த 2016 உலக ரி20 கிண்ணத்தில் அரையிறுதிக்கு முன்னேறியது. தற்போது உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதி போட்டியில் வென்று அசத்தியுள்ள கேன் வில்லியம்சன் தலைமையிலான



நியூசிலாந்து அணி, காலம் காலமாக கறுப்பு குதிரைகளாக இருந்து இம்முறை கிண்ணம் வெல்ல வாய்ப்புள்ள அணியாக பார்க்கப்படுகிறது. டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேச தரவரிசையில் முதலிடம் மற்றும் ரி20 சர்வதேச தரவரிசையில் மூன்றாம் இடம் என அனைத்திலும் பிரகாசித்து வருகிறது.



வேகப் பந்து வீச்சில் ரிம் சௌவ்தி, ரென்ட் போல்ட், கேல் ஜமிசன், லுக்கி பெர்குசன் என்று ஒரு பட்டாளமும் சோதி, மிட்செல் சான்ட்னர் போன்ற சுழற்பந்து வீச்சாளர்களுடன் கேன் வில்லியம்சன், மார்டின் குப்ரில், டேவன் கென்வே என்று தரமான துடுப்பாட்ட வீரர்களும் உள்ளனர். அத்துடன் விக்கெட் கீப்பராக ரிம் செய்வேட், கிளென் பிலிப்ஸ் மற்றும் சகலதுறை வீரர்களாக ஜிம்மி நீசம்ஸ், மார்க் சாம்மன் உம் இருக்கிறார்கள்.

ஒட்டுமொத்தமாக அதிரடியாகவும் சூழல் நிலைக்கேற்பவும் ஆடக்கூடிய வலுவான அணியை நியூசிலாந்து அறிவித்துள்ளது.

முன்னணி வீரர்களான ரோஸ் டெய்லர் மற்றும் கொலின் மன்ரோ போன்றோருக்கு அணியில் இடம் கிடைக்கவில்லை. மார்க் சாம்மன், 2014 மற்றும் 2016 ரி20 உலக கிண்ணத்தில் கொங் கொங் அணி சார்பாக விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நியூசிலாந்து கடந்த 2016ம் ஆண்டு ரி20 உலகக் கிண்ணத்திற்கு பின் மொத்தமாக 52 ரி20 சர்வதேச ஆட்டங்களில் 25 வெற்றி மற்றும் 22 தோல்வி உடன் 3 சமநிலை மற்றும் 2 முடிவற்ற நிலையும் பெற்றுள்ளது. இதுவரை ரி20 உலக கிண்ணத்தில் மொத்தமாக 30 ஆட்டங்களில் விளையாடி 15 வெற்றி, 13 தோல்வி மற்றும் 2 சமநிலை கிடைத்துள்ளது அத்துடன் இருதடவை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.


## அவுஸ்திரேலியா

இதுவரை ரி20 உலக கிண்ணத்தில் மொத்தமாக 29 ஆட்டங்களில் விளையாடிய அவுஸ்திரேலியாவுக்கு 16 வெற்றி மற்றும் 13 தோல்வி கிடைத்துள்ளது.



ஐந்து உலகக் கிண்ணங்கள் மற்றும் இரண்டு சாம்பியன் கோப்பைகளை வென்ற அணி , கடந்த காலத்தில் ரி20 உலக கிண்ண தொடரில் 2007 மற்றும் 2012 இல் அரையிறுதிக்கும் 2010 இல் இறுதிக்கும் முன்னேறியது. இதை விடுத்து கடந்த இரு தொடர்களில் அரையிறுதியை கூட எட்டிப் பார்க்கவில்லை. தற்போது ரி20 சர்வதேச தரவரிசையில் ஆறாம் இடத்தில் உள்ளது அவுஸ்திரேலியா.

டேவிட் வார்னர், ஆரோன் பிஞ்ச், கிளென் மேக்ஸ்வெல் போன்ற அதிரடி வீரர்களுடன் ஸ்டீவன் ஸ்மித் துடுப்பாட்ட வீரர்களாக அணியில் உள்ளனர். வேகப்பந்து வீச்சாளராக மிட்செல் ஸ்டார்க், பட் கம்மின்ஸ், ஜோஸ் ஹசல்வூட், கேன் ரிச்சார்ட்சன் இடம் பிடிக்க ரி20 சர்வதேச தரவரிசையில் முதல் பத்து இடங்களுக்குள் உள்ள அடம் சம்பா, அஸ்ரன் ஆகார்




சுழற் பந்து வீச்சாளர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் சகல துறை வீரர்களாக மார்க்ஸ் ஸ்டோனிஸ், மிட்செல் மார்ஸ் உடன் மேத்யூ வேட் மற்றும் புதுமுக வீரனான ஜோஸ் இங்லிஸ் விக்கெட் கீப்பர்களாக உள்ளனர்.



அதிக ஆரம்ப வீரர்களில் தங்கியுள்ள அணிக்கு சரியான மத்திய வரிசை வீரர் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. மார்ஸ் கடந்த இரு தொடர்களில் பெற்ற ஓட்டங்களினால், ஸ்டீவன் ஸ்மித் 5ம் அல்லது 6ம் இடத்தில் விளையாட வாய்ப்புள்ளது. பேப்பரில் வலுவான பந்து வீச்சு கூட்டணியாக இருக்கிற பந்து வீச்சாளர்கள் திறம் பட விளையாட வேண்டிய அவசியம் உள்ளது.

அவுஸ்திரேலியா, கடந்த 2016ம் ஆண்டு ரி20 உலக கிண்ணத்திற்கு பின் மொத்தமாக 58 ரி20 சர்வதேச ஆட்டங்களில் விளையாடி 29 வெற்றி, 27 தோல்வி மற்றும் 2 முடிவற்ற நிலையும் பெற்றுள்ளது .

| Player | Span | Mat | Inns | NO | Runs | HS | Ave | BF | SR |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| BB McCullum | 2007-2014 | 25 | 25 | 3 | **637** | 123 | 28.95 | 496 | 128.42 |
| LRPL Taylor | 2007-2016 | 28 | 25 | 5 | **562** | 62* | 28.10 | 440 | 127.72 |
| MJ Guptill | 2009-2016 | 21 | 20 | 2 | **409** | 80 | 22.72 | 368 | 111.14 |
| KS Williamson | 2012-2016 | 13 | 12 | 1 | **305** | 51 | 27.72 | 274 | 111.31 |
| SB Styris | 2007-2010 | 16 | 14 | 2 | **233** | 42 | 19.41 | 196 | 118.87 |
| JDP Oram | 2007-2012 | 18 | 15 | 1 | **189** | 35 | 13.50 | 143 | 132.16 |

**ரி20 உலக கிண்ணத்தில் அதிக ஓட்டங்கள் பெற்ற நியூசிலாந்து வீரர்கள்**

| Player | Span | Mat | Inns | Overs | Mdns | Runs | Wkts | BBI | Ave | Econ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| NL McCullum | 2007-2016 | 22 | 20 | 67.1 | 0 | 399 | **23** | 3/15 | 17.34 | 5.94 |
| DL Vettori | 2007-2012 | 17 | 17 | 67.1 | 0 | 392 | **20** | 4/20 | 19.60 | 5.83 |
| KD Mills | 2009-2014 | 15 | 15 | 52.5 | 0 | 426 | **16** | 3/33 | 26.62 | 8.06 |
| TG Southee | 2010-2014 | 10 | 10 | 35.0 | 1 | 314 | **14** | 3/16 | 22.42 | 8.97 |
| SE Bond | 2007-2010 | 11 | 11 | 43.0 | 1 | 325 | **12** | 2/12 | 27.08 | 7.55 |
| MJ Santner | 2016-2016 | 5 | 5 | 18.1 | 0 | 114 | **10** | 4/11 | 11.40 | 6.27 |
| IS Sodhi | 2016-2016 | 5 | 5 | 19.4 | 0 | 120 | **10** | 3/18 | 12.00 | 6.10 |

**ரி20 உலக கிண்ணத்தில்**
**அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய நியூசிலாந்து வீரர்கள்**

| Player | Span | Mat | Inns | NO | Runs | HS | Ave | BF | SR |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| SR Watson | 2007-2016 | 24 | 22 | 3 | **537** | 81 | 28.26 | 381 | 140.94 |
| DA Warner | 2009-2016 | 23 | 23 | 1 | **473** | 72 | 21.50 | 367 | 128.88 |
| MEK Hussey | 2007-2012 | 21 | 16 | 8 | **437** | 60* | 54.62 | 313 | 139.61 |
| ML Hayden | 2007-2007 | 6 | 6 | 3 | **265** | 73* | 88.33 | 183 | 144.80 |
| GJ Maxwell | 2012-2016 | 13 | 10 | 1 | **264** | 74 | 29.33 | 165 | 160.00 |
| CL White | 2010-2014 | 15 | 13 | 6 | **258** | 85* | 36.85 | 189 | 136.50 |
| DJ Hussey | 2009-2012 | 10 | 10 | 1 | **234** | 59 | 26.00 | 177 | 132.20 |
| AJ Finch | 2014-2016 | 6 | 6 | 0 | **216** | 71 | 36.00 | 171 | 126.31 |

**ரி20 உலக கிண்ணத்தில் அதிக ஓட்டங்கள் பெற்ற அவுஸ்திரேலிய வீரர்கள்**

| Player | Span | Mat | Inns | Overs | Mdns | Runs | Wkts | BBI | Ave | Econ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| SR Watson | 2007-2016 | 24 | 23 | 75.2 | 1 | 608 | **22** | 3/26 | 27.63 | 8.07 |
| MG Johnson | 2007-2010 | 14 | 14 | 52.1 | 0 | 351 | **20** | 3/15 | 17.55 | 6.72 |
| MA Starc | 2012-2014 | 10 | 10 | 40.0 | 0 | 310 | **15** | 3/20 | 20.66 | 7.75 |
| DP Nannes | 2010-2010 | 7 | 7 | 26.0 | 1 | 183 | **14** | 4/18 | 13.07 | 7.03 |
| SR Clark | 2007-2007 | 6 | 6 | 24.0 | 0 | 144 | **12** | 4/20 | 12.00 | 6.00 |
| SPD Smith | 2010-2016 | 11 | 7 | 23.0 | 1 | 163 | **11** | 3/20 | 14.81 | 7.08 |
| B Lee | 2007-2009 | 8 | 8 | 32.0 | 0 | 266 | **10** | 3/27 | 26.60 | 8.31 |

**ரி20 உலக கிண்ணத்தில்**
**அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய அவுஸ்திரேலிய வீரர்கள்**